## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி


03.09.2023 பொதுக்காலம் 22ம் ஞாயிறு - திருப்பலி 02

05.09.2023 கொல்கொத்தா நகர் புனித தெரேசா - திருப்பலி 03

08.09.2023 புனித கன்னி மரியாவினுடைய பிறப்பு விழா - திருப்பலி 04

10.09.2023 பொதுக்காலம் 23ம் ஞாயிறு - திருப்பலி 06

12.09.2023 புனித மரியாவின் தூய்மைமிகு பெயர் விழா - திருப்பலி 07

14.09.2023 திருச்சிலுவையின் மாட்சி விழா - திருப்பலி 08

15.09.2023 புனித மரியாவின் துயரங்கள் - திருப்பலி 09

17.09.2023 பொதுக்காலம் 24ம் ஞாயிறு - திருப்பலி 10

21.09.2023 புனித மத்தேயு, நற்செய்தியாளர் விழா- திருப்பலி 12

22.09.2023 அருளாளர் ஜோசப் கலசான்ஸ் மற்றும் நண்பர்கள் நினைவு - திருப்பலி 13

24.09.2023 பொதுக்காலம் 25ம் ஞாயிறு - திருப்பலி 14

27.09.2023 புனித வின்சென்ட் தே பால் விழா - திருப்பலி 15

29.09.2023 புனிதர்கள் மிக்கேல், கபிரியேல், இரபேல் விழா-திருப்பலி 17

30.09.2023 புனித ஜெரோம் - திருப்பலி 18


## பகுதி 2: நம்பிக்கையில் வளர...


கன்னி மரியாவின் பிறப்பு தந்த சிறப்பு 19

அருளாளர் ஜோசப் கலாசன்ஸ் மற்றும் நண்பர்களின் தியாக வாழ்வு 22

சிலுவை தரும் அமைதி 24

திருஅவைச் செய்திகள் 27

# பகுதி 1: வழிபாட்டு வழிக்காட்டி

## 03.09.2023 பொதுக்காலம் 22ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திரு. செபாஸ்டின்

I. எரே. 20: 7-9 II. உரோ. 12: 1-2 மத். 16: 21-27

ஆண்டவர் இயேசுவின்பின் செல்லும் சகோதர சகோதரிகளே, இன்று ஆண்டின் பொதுக்காலம் 22ம் ஞாயிற்றுக்கிழமை. "என் பொருட்டு தம்மையே அழித்துக்கொள்கிற எவரும் வாழ்வடைவர்" (மத். 16:25). இன்றைய முதல் வாசகத்தில் எரேமியா இறைவனின் வார்த்தையைப் பேசி துன்ப துயரங்களை அனுபவிப்பதையும் இறைவார்த்தை இதயத்தில் தீயாய் இருக்கிறது என்றும், எலும்புகளுக்குள் அடைப்பட்டுக் கிடக்கின்றது என்றும் தன் முறைபாட்டை விவரிக்கின்றார். இன்றைய நற்செய்தியில் இயேசு தன் பாடுகளை முன்னறிவித்தபோது, உடல் துன்பம், சிலுவைச் சாவு வேண்டாம் என்ற பேதுருவை இயேசு அலகை என்றும், நீ மண்ணுலகைப் பற்றி சிந்திக்கிறாய் என்றும் கடிந்துக் கொள்கிறார்.

அன்புக்குரியவர்களே, இயேசு மனுவுடல் எடுத்த நோக்கமே பாடுகள்பட்டு, இரத்தம் சிந்தி, மரித்து மனுக்குலத்தை மீட்க வேண்டும் என்பதே. அதுவே இறைத்திருவுளம், எனவேதான் "ஆண்டவரே ஓர் உடலை எனக்கு அமைத்துக் கொடுத்தீர் உமது திருவுளம் நிறைவேற்ற இதோ வருகின்றேன்" என்றார் (எபி. 10: 5,7). உடல் இல்லாமல் ஆன்மா தனித்து வாழ முடியாது, முழு உடலையும் இறை திருவுளத்திற்கேற்ப பயன்படுத்தினாலே நம் ஆன்மீக வாழ்வு பலன் தரும் வாழ்வாக இருக்கும். இதையே 2ம் வாசகமும் வலியுறுத்துகிறது. இயேசுவை முன்னிட்டு நாம் அனுபவிக்கும் துன்பங்கள் நிலைவாழ்வு தரும் என்பதில் ஐயமில்லை. இயேசுவை பின்தொடர்ந்து செல்லும் சீடனுக்கு அன்றாட சிலுவைகள் உண்டு என அறிந்து அதை ஏற்க மறுப்பது கிறிஸ்துவை பின் செல்ல மறுதலிப்பதாகும். நம் உடல் இறைவனின் கோவில் என நம்பும் நாம், அக்கோவிலை இறைவனுக்கு உகந்ததாக பாதுகாக்க வேண்டியது நமது பொறுப்பும் கடமையுமாகும். அவ்வுடலில் இறைத்திருவுளம் எப்படிப்பட்டதாக இருந்தாலும் அதை இறைவனுக்கு காணிக்கையாக்கும்பொழுது நம் வாழ்வு கனிதரும் வாழ்வாக மாறும். இவ்வாறு வாழ்ந்த புனிதர்களை முன்மாதிரியாகக் கொண்டு நம் உடலை தூயதாக பேண வரம் வேண்டி இத்திருப்பலியை பக்தியோடு ஒப்புக்கொடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. வாழ்வளிக்கும் வள்ளலே எம் இறைவா, எம் திருஅவையின் பணியாளர்களை உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். எரேமியாவைப் போன்று இறைவார்த்தையின் வல்லமையை உணர்ந்து துணிச்சலோடு பணியாற்றும் ஆற்றலை அவர்களுக்கு அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. நீதி வழங்கும் நல்லவரே இறைவா, உம்மையும் உம் வார்த்தைகளையும் அறியாத தலைவர்கள் எம் நாட்டை ஆளுகின்றனர். அவர்கள் மனித நேயத்தோடு மக்களை வழிநடத்தி சாதி, சமய, இன, மொழி வேறுபாடுகளை கடந்து அனைவரது உரிமைகளையும் பாதுகாக்கும் நல்ல தலைவர்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. பாடுகள் வழியாக மீட்பைத் தந்த இறைவா, சிலுவையில் உம்மை வழிபடும் நாங்கள், முரண்பட்ட வாழ்வுக்குள் எங்களை அடைத்துக்கொண்டு, போலியாக உம்மைப் பின்பற்றி வரும் எங்கள் வாழ்வை உமக்குகந்த உண்மையான வாழ்வாக மாற்றிட வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

4. நலம் தரும் நாயகரே எம் இறைவா, கஷ்டங்களை சுமந்து வாழும் எங்கள் வாழ்வை உமது விடியலுக்காய் எதிர்நோக்கி ஆவலோடு காத்திருக்கும் எங்களுக்கு நீர் உம் கருணையினால் புதுவாழ்வளித்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 05.09.2023 கொல்கொத்தா நகர் புனித தெரேசா திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிவில்சன்

கொல்கொத்தா நகர் புனித தெரேசாவின் நினைவு நாளை திருஅவை கொண்டாடுகின்றது. இறையேசுவின் இறையாட்சிக்கு வித்திட வேண்டிய பணிகளைப் பற்றி இவரது வாழ்வின் மூலம் கண்டுக்கொள்ளலாம். மாசிடோனியா நாட்டில் ஸ்கோப்ஜே நகரத்தில் செல்வ செழிப்பு மிகுந்த குடும்பத்தில் பிறந்து ஆக்னஸ் கோங்சா எனப்பெயரிடப்பட்டு (பூவின் அரும்பு எனப் பொருள்). கல்வியில் புத்தகம் வாசிப்பது, மறைக்கல்வி கற்றுத்தருவதில் மிகுந்த ஆர்வமுள்ளவராக இருந்தார். தாயின் கனத்த இதயத்தோடு சொல்லி அனுமதி பெற்று அயர்லாந்து சென்று லொரேற்றோ நகர் மடத்தில் சேர்ந்து ஆங்கிலம் பயின்று பின் கொல்கொத்தா வந்து மடத்தில் இணைந்து டார்ஜிலிங்கில் நவ துறவி பயிற்சி பெற்று உறுதிமொழி ஏற்று தனது பெயரை குழந்தை இயேசு தெரேசா என மாற்றிக் கொண்டார். என்றல்லி என்ற ஊரின் பள்ளியில் ஆசிரியராகப் பணி செய்தார். அதே வேளையில் புனித அன்னாவின் புதல்விகள் என்ற துறவற சபையின் பொறுப்பையும் ஏற்றார்.

அவரது அறையிலிருந்து பார்த்தால் குறுகலான சந்து மற்றும் வீதிகளில் அங்கு வாழ்ந்த மக்கள் பசிப்பிணிகளால் வாடிய நிலைகள் தெரியும். ஆனால் தேவையான நிவாரணம் மக்களுக்கு கிடைக்கவில்லை என்பதனை உணர்ந்து பங்குத் தந்தையிடமும் பேராயரிடமிருந்தும் அனுமதி கேட்டும் கிடைக்காமல் தனது அறையிலிருந்து வெளியேறி பல துன்பங்களுக்கு ஆளாகி உணவின்றி, தங்க இடமின்றி, சாலைகளில் படுத்துறங்கி, கையில் பணமின்றி, பாதுகாப்பிற்கு துணையின்றி பின் சிறிய உதவி கிடைத்து அதிலிருந்து சாலைகளில் மருத்துவமனைகளில் கவனிப்பாரற்று இருப்போர், ஆதரவற்றோர், தொழுநோயாளிகள் என

அனைவரையும் அழைத்து வந்து உணவு, உடை, மருத்துவ வசதி செய்துக்கொடுத்து பராமரித்தார். உலகெங்கும் 561 நிர்மல் சபைகள் உள்ளன. இந்தியாவில் மட்டும் 169 சபைகள் உள்ளன. இவரது இறுதி பயணத்தின்போது உலகெங்கிலுமிருந்து 49 நாட்டுத் தலைவர்கள் பங்கேற்றனர். அன்னையின் விருதுவாக்கு "இறைவனின் கரங்களில் நான் ஓர் எழுதுகோல்" என்ற அன்னையின் விருதுவாக்கை அவர் அடிக்கடி கூறிக்கொள்வார். அன்னையின் இவ்விருதுவாக்கை நாமும் ஏற்று தியாக உள்ளம் கொண்டவர்களாக வாழ வரமருள வேண்டி இத்திருப்பலியில் பக்தியோடு பங்கேற்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. தாயும் தந்தையுமான இறைவா, எம் தாய்திருஅவையின் தலைவர்கள் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் அனைவரும் தங்களின் வாழ்வை முழு அர்ப்பண உள்ளத்தோடு செயல்பட தூய ஆவியாரின் அருட்கொடைகளை பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

2. இதோ உன் தாய் என்ற இறைவா, இன்று பெண்கள் பலவிதமான தீமைகளுக்கும், கொடுமைகளுக்கும் ஆளாக்கப்படுகின்றனர். உலகளவில் பெண்களை குறிவைத்து தாக்குகின்ற அனைவரும் மனமாற உம் தாயுள்ளத்தை அவர்களுக்கு அருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. உலகிற்கெல்லாம் முதன்மையான இறைவா, கலைமான் நீரோடையை ஆவலாய் தாகத்தோடு தேடுவதுபோல் இன்று உலகமே பல போராட்டங்களில் சிக்கித் தவிக்கின்றது. இவையனைத்திலும் இருந்து ஒட்டு மொத்த மனிதம் விடுதலை பெற வேண்டும். அன்பும் இரக்கமும் நிறைந்த மறுமலர்ச்சி ஆட்சி மலர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 08.09.2023 புனித கன்னி மரியாவினுடைய பிறப்பு விழா திருப்பலி

### முன்னுரை

திரு. சாம்சன்

இன்று திருஅவையானது உலக மீட்பரின் தாய், கதிரவனை ஆடையாக அணிந்தவள். 12 யூத குலமான பன்னிரு விண்மீன்களை தன் தலைமீது கிரீடமாக சூட்டியவர் நிலவை தனது காலடியில் வைத்தவள் தூய ஆவியால் கருவுற்று பாவக்கறை சிறிதும் இல்லாமல் மாசுமருவற்ற இயேசு பாலனைப் பெற்றெடுத்த அன்னை மரியாளின் பிறப்பு விழாவினைக் கொண்டாடுகிறது. மரியாவின் பிறப்பு விழா நான்காம் நூற்றாண்டிலிருந்து கொண்டாடப்பட்டு வருகிறது. புனித அகுஸ்தினார் ஏவாளின் பாவத்திலிருந்து நம்மை விடுவிக்க அன்னை மரியாள் நமக்குக் கிடைத்துள்ளார் என்று "நாம் அனைவரும் ஆவலுடன்

எதிர்பார்த்த பெருவிழா வந்துவிட்டது. மண்ணில் தோன்றிய விண்மலர், லீலிமலர் முதல் பெற்றோரிடமிருந்து நாம் பெற்றுக்கொண்ட தூசுபடிந்த மனித இயல்பு, மாற்றமடைந்து மேன்மைப் பெற்றுவிட்டதை நினைத்து அக்களிப்போம், ஆனந்தங்கொள்வோம் என்று கூறுகிறார். உலகமெங்கும் உள்ள மக்கள் அனைவரும் திருஅவையின் தாயாம் கன்னி மரியாளின் பிறந்தநாள் விழாவைக் கொண்டாடுகிறார்கள். ஏனென்றால் அகில உலக திருஅவையின் தூணாக இருந்து தனது செபத்தாலும், பரிந்துரையாலும் நம்மை வழிநடத்தி வருகின்றவர் நம் அன்னை.

அன்னை நமக்கு செய்துவரும் அற்புதங்களும், அதிசயங்களும் ஏராளம். அன்று தனது உறவுக்காரப் பெண் எலிசபெத்துக்கு தேடிச்சென்று உதவி செய்தார். கானாவூர் திருமணத்தில் தனது மகனை உதவி செய்யச் சொல்கிறார். இதுபோன்ற இரக்கக் குணம் கொண்ட அன்னையை நாம் விழா எடுத்து சிறப்பிப்பதில் பெருமைக் கொள்ள வேண்டும். நாமும் உதவி செய்யும் குணத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். கபிரியேல் தூதரின் வழியாக கடவுள் தந்த மீட்புத்திட்டத்திற்குப் பணிந்து நடந்ததால் நாமும் இன்று மீட்கப்பட்டோம் நம்மிடம் இத்தகைய பணிவு இருக்கிறதா என்று சற்று சிந்திப்போம். அன்னையின் பிறப்பு விழாவைக் கொண்டாடும் நாம் ஒவ்வொருவரும் அன்னையின் நல்மதிப்பீடுகளான பொறுமை, உண்மை, தாழ்ச்சி, பணிவு, இரக்கம் போன்ற நற்குணங்கள் நம்மிடத்தில் வளர வேண்டுமென்று பக்தியுடன் இத்திருப்பலியில் கலந்துக்கொள்வோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. நல்லாயனாம் இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் அனைவரும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களை இறையாட்சியின் பாதையில் நடத்திச் செல்ல வேண்டிய அருட்கொடைகளை அவர்களுக்கு அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. வாழ்வின் ஒளியாம் இறைவா, ஆயனில்லா ஆடுகளைப்போல் அலைந்து திரியும் உம் பிள்ளைகளை கண்ணோக்கும், உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடமின்றி தவிப்போரை தேடிச்சென்று உதவிக்கரம் நீட்டும் நல்லுள்ளங்களை ஆசீர்வதித்து மேலும் அவர்கள் உமக்கேற்ற பணியைத் தொடர்ந்து செய்யக் கூடிய ஆற்றலையும் வல்லமையையும் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. பாதுகாக்கும் பரம்பொருளே எம் இறைவா, நாட்டையாளும் தலைவர்கள் சுயநலமின்றி மக்களை தன் ஆளுகைக்குட்படுத்தி, அவர்களின் தேவைகளை அறிந்து செயல்பட வேண்டிய பரந்த உள்ளத்தை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

## 10.09.2023 பொதுக்காலம் 23ஆம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I. எசே. 33: 7-9 II. உரோ. 13: 8-10 மத். 18: 15-20

இயேசு கிறிஸ்துவில் அழைப்புப் பெற்றுள்ள நம்பிக்கையாளர்களே, இன்று ஆண்டின் பொதுக்காலம் 23ம் ஞாயிறு கல்வாரிப் பலியில் பங்கேற்க வந்திருக்கின்றோம். இன்றைய முதல் வாசகத்தில் எசேக்கியேல் இறைவாக்கினரை இஸ்ரயேல் வீட்டாருக்கு காவலாளியாக ஏற்படுத்துகிறார் இறைவன். காவலாளி என்றால் காவல் காப்பவர் மட்டுமல்ல, மாறாக, ஆண்டவரின் வாக்கை கேட்டு இஸ்ரயேல் மக்களை அவர் எச்சரிக்கை விடுக்க வேண்டுமென்ற பணியைத் தருகிறார். மக்கள் தவறு செய்யும் போது, அவர்களை கண்டித்து திருத்த அக்கறை உள்ளவராக எசேக்கியேல் இறைவாக்கினரை அழைக்கிறார் இறைவன். இரண்டாம் வாசகத்தில் புனித பவுல் அன்பை மையப்படுத்தி வாழ சொல்கிறார். "உன்மீது அன்பு கூர்வதுபோல் உனக்கு அடுத்திருப்பவர்மீதும் அன்பு கூர்வாயாக" என்கிறார். கிறிஸ்தவ சமூகம் பிறர்மேல் அக்கறைக்கொண்டு பிறர்நலனில் ஆர்வமுள்ளவராக செயல்படுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இன்றைய நற்செய்தியில் நமக்கெதிராக நம் சகோதர சகோதரி பாவம் செய்தால் அவர் தனித்திருக்கும்போது அவரது குற்றத்தை எடுத்துக் காட்ட அழைக்கப்படுகிறோம். அவர்கள்மீது அக்கறைக்கொண்டு நல்வழிப்படுத்த வேண்டும். பிறரது குற்றத்தை பொதுவாக்கி அவர்களை அவமானப்படுத்துவது, அவர்களின் மனம் புண்படும்படி செய்வது, இறைவனுக்கெதிரான செயல். நமது சகோதர சகோதரிகளின் தவறுகளை சுட்டிக்காட்டி திருத்துவது ஒவ்வொரு கிறிஸ்தவரின் கடமை. இதில் தவறினால், பழி சுமத்தப்படுவோம் என்பதை மறவாதீர்கள். நமக்கு தீமை செய்பவர்களை அன்பு செய்வதின் மூலம் அவர்கள் மனந்திருந்தி வாழ நாம் உதவி செய்கிறோம். அன்பு வழியில் பிறர் வாழ்வை மாற்றி திருத்துவதற்குத் தேவையான அருளை வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. "என் ஆடுகளை நான் அறிந்திருக்கிறேன் அவைகளும் என்னை அறிந்திருக்கின்றன" என்று கூறிய ஆண்டவரே, திருஅவையின் தலைவரான திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார், பொதுநிலையினர் அனைவரும் மக்களைப் புரிந்துக்கொண்டு உம் வழியில் நடத்தியருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. "உங்களைத் தூய்மைப்படுத்தி நீங்கள் தூயவராய் இருங்கள்" என்ற எம் அன்பு தந்தையே, இன்று நீர் எமக்கு விடுக்கும் எச்சரிக்கையை உணர்ந்தவர்களாய் எங்கள் பழைய பாவ வாழ்க்கையை விட்டுவிலகி வாழ உமதருளை தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. எக்காலத்துக்கும் அரசராய் இருக்கின்ற எம் இறைவா, நாட்டையாளும் தலைவர்கள் வேற்றுமைப் பாராட்டாமல் அனைவரும் ஒரே குடிமக்கள், எனக் கருதி பாகுபாடின்றி நல்லாட்சி புரிந்திடவும், மக்களின் தேவைகளை கேட்டறிந்து செயல்படக் கூடிய நல்ல ஞானத்தையும், மனதையும் அளித்தருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

4. "சோதனைக்குட்படாதபடி செபியுங்கள்" என்றவரே, வளர்ந்து வரும் விஞ்ஞான உலகில் செபம் செய்வது, உம்மை வணங்குவது போன்ற செயல்களைச் செய்யும் ஆர்வம் மக்களிடையே குறைந்துக்கொண்டு வருகின்ற காலக்கட்டத்தில் நீரே மக்களின் மனதில் நம்பிக்கை என்னும் நங்கூரத்தை செலுத்தி, வாழ்வை மாற்றியருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 12.09.2023 புனித மரியாவின் தூய்மைமிகு பெயர் விழா திருப்பலி

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

அன்புள்ள இறைமக்களே, இன்று மரியாளின் தூய்மைமிகு விழாவினைக் கொண்டாடுகின்றது. கி.பி. 17ம் நூற்றாண்டில் துருக்கியர்கள் ஆஸ்திரியா நாட்டின்மீது படையெடுத்தார்கள். போரின்போது ஆஸ்திரிலேயாவிலுள்ள கிறிஸ்தவர்கள் போரில் எதிரிகளை தோற்கடிக்கவும், அவர்கள் தலைநகரமான வியான்னாவை துருக்கியவர்களிடமிருந்து விடுவிக்கவும் அன்னை மரியிடம் உருக்கமாக மன்றாடினார். அவ்வாறே வியன்னா நகர் அற்புதமாக விடுக்கப்பட்டது. இதற்கு நன்றியாக திருத்தந்தை 11ம் இன்னசென்ட் "மரியாவின்தூய பெயர்" என்று விழா எடுத்துக் கொண்டாட பணித்தார். இவ்விழா அன்னை மரியாவின் பிறப்பு விழாவுக்குப் பின்வரும் ஞாயிற்றுக் கிழமையில் கொண்டாடப்பட்டது. ஆனால் திருத்தந்தை, புனித பத்தாம் பியுஸ் இவ்விழா செப்டம்பர் 12ம் நாளில் கொண்டாடப்படும் என்றார் இதன்படி அன்று முதல் இன்றுவரை இத்திருவிழா இந்நாளில் கொண்டாடப்படுகிறது.

மரியா என்ற பெயர் ஏதோ தற்செயலாக அவருக்கு சூட்டப்பட்டதாகக் கருதக்கூடாது, இறைவனின் திட்டப்படி அளிக்கப்பட்டது. மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட பெயர். "மரியா நம்பிக்கையாளர்களின் தாயென்றும், கடவுளின் தாயென்றும், எல்லா பெண்களிலும் ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றும், சிலுவையில் மரிக்கும் நம் ஆண்டவர், நமக்கு கொடுத்த தாய் என்றும் நாம் அனைவரும் ஏற்றுக்கொண்டு மரியாளின் நாமத்தைப் பல பெயர்களில் போற்றி வருகின்றோம். இன்று இவ்வுலகில் அன்னை மரியின் பெயர் இல்லாத கத்தோலிக்க ஆலயங்களோ, மறை மாவட்டங்களோ, கல்விக்கூடங்களோ, மருத்துவமனைகளோ, கல்லூரிகளோ இல்லையென்று சொல்லலாம். புனித மரியாளின் திருவிழாக்கள் மட்டுமே வருடம் முழுவதும் ஒவ்வொரு மாதமும் பல பெயர்களில் கொண்டாடப்படுகிறது. மரியாவின் திருப்பெயருக்கு மரியாதை செலுத்துவதோடு பக்தியோடும், அன்போடும்

அன்னையின் புகழ்பாடுவோம், அன்னை மரியாவின் பரிந்துரையை நாடுவோம். அன்னை மரியாவின் வழியாக இறையருள் பெற்றிட இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் அனைவரும் திருஅவையிலுள்ள அனைவரையும் புனித பாதையில் நடத்திச் செல்ல வல்லமையும், அருளையும் அளித்து பாதுகாத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. நம்பிக்கையின் ஊற்றே எம் இறைவா, மரியன்னையின் மாண்பினை உணராத பிற மதத்தினரும், மரியன்னையை அறிந்த கத்தோலிக்கர்களும் அன்னை மரியாவின்மீது நம்பிக்கைக்கொள்ளவும் அன்னை வழியாக இறைவனை அடையும் வரத்தைப் பெற்றுவாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
3. பாதுகாக்கும் தந்தையே, இன்றைய காலக்கட்டத்தில் திருஅவைக்கும் கத்தோலிக்கர்களுக்கும்ஏற்பட்டுள்ள அவலநிலைகள் துன்புறுத்தல்கள், உயிர்கொலைகள் போன்ற துயர சூழலிலிருந்து அன்னை மரியாள் தனது மகனின் பரிந்துரையின் மூலம் அமைதியும், சமாதானமும் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

## 14.09.2023 திருச்சிலுவையின் மாட்சி விழா திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

I. எண். 21: 4-9 II. பிலிப். 2: 6-11 யோவா. 3: 13-17

இறையேசுவில் இனிய திருக்குலமே, இன்றைய தினத்தை திருச்சிலுவையின் மாட்சிவிழாவாக கொண்டாட நம் திருஅவை நம்மை அழைக்கிறது. எருசலேமில் கி.பி. 335ம் ஆண்டு செப்டம்பர் 13ம் நாள் ஆண்வரின் உயிர்ப்புக்கென்று ஒரு ஆலயம் எழுப்பப்பட்டது. அந்நாளை உயிர்ப்பு விழாவாக கொண்டாடிய மக்கள் 14ம் நாளை ஆண்டவரின் சிலுவை சாவை நினைவு கூர்ந்து சிலுவையை அடையாளமாக வைத்து வழிப்பட்டனர். இந்த விழா 5ம் நூற்றாண்டிலிருந்து சிறப்பிக்கப்பட்டு வருகிறது. உரோமை அரசி ஹெலனர் (அலெக்சாண்டர் டைனின் தாயார்) புனித பயணம் மேற்கொண்டபோது எருசலேமில் ஆலயங்களை புதுப்பிக்கும் வேலையில் புதையுண்டு கிடந்த 3 சிலுவைகளைக் கண்டெடுத்து இதில் எது இயேசுவை தாங்கிய சிலுவை என்பது கேள்விக்குரியதாக இருந்தபோது, அச்சூழலில் மரணமடையும் நிலையில் நோய் வாய்ப்பட்டிருந்த ஒருவரை அந்த மூன்று சிலுவைகளையும் தொடச் செய்து அதில் ஒரு சிலுவையை தொட்டப்போது அந்த நோயாளி நோய் நீங்கி நலமடைந்தார். அதுவே இயேசுவின் சிலுவை என் அரசி முடிவு செய்து அதனை சகல

சிறப்புக்களுடனும், வணக்கத்திற்குரிய ஒன்றாக அறிவித்து அந்த இடத்தில் கல்லறையின் பேராலயம் ஒன்றையும் கட்டி எழுப்பினர். இந்த மாபெரும் நிகழ்வினை சிறப்பிக்கும் விதமாகத்தான் செப்டம்பர் 14ம் நாள் திருச்சிலுவையின் மாட்சி என்ற பெருவிழாவை கத்தோலிக்க திருஅவை கொண்டாடுகின்றது. இம்மாட்சி பெற்ற திருச்சிலுவையை நாமும் அடைய வெற்றியின் சிகரம் என்ற சிலுவையை மகிமைப்படுத்தி இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. திருஅவையின் அடித்தளமே எம் இறைவா, உம் வழியைப் பின்பற்றி வாழும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், பொதுநிலையினர் அனைவரும் சிலுவைச் சாவை ஏற்று, அதன் வழி நடக்க தகுந்தவர்களாக தங்களை மாற்றிக்கொண்டு வாழும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. தியாகத்தின் அர்ப்பணமே இறைவா, போலியாக தங்கள் வாழ்வை ஏமாற்றிக்கொண்டு வாழும் மக்களுக்கு உம் சிலுவை தியாகத்தை உணர்த்தி, மாபெரும் பிரசன்னத்தை உணர்ந்தவர்களாக உலக மக்களுக்கு நிறைவான மகிழ்வை தங்கள் வாழ்வில் ஏற்படுத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. குணமளிக்கும் மருத்துவரே எம் இறைவா, பலவிதமான நோயினால் துன்புறுவோர், ஆதரவற்றோர், கைவிடப்பட்டோர், பிள்ளைகளால் புறக்கணிக்கப்பட்டோர், யாரும் நினையாதோர் அனைவரையும் உம்பதம் அர்ப்பணிக்கின்றோம். நீரே உடனிருந்து பாதுகாத்து அரவணைத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 15.09.2023 புனித மரியாவின் துயரங்கள் திருப்பலி

**முன்னுரை** திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

கடவுளின் அழைப்பை ஏற்று இறைத்திட்டத்திற்கு கீழ்ப்படிந்து நடக்கும் இறைச்சமூகமே, இன்று திருஅவையின் புனித மரியாளின் துயரங்களை நினைவு கூறுகிறது. 1808ம் ஆண்டில் திருத்தந்தை 7ம் பத்திநாதர் அலெக்சாண்டர் மன்னனால் சிறைப்பிடிக்கப்பட்டு பலவித துன்பங்கள், வேதனைகளை அனுபவித்தார். தன்னுடைய துன்பங்களை அன்னை மரியாளின் துன்பங்களோடு சேர்த்து ஒப்புக்கொடுத்ததை "மரியாவின் வியாகுலங்கள்" என்று கொண்டாட உத்தரவிட்டார். அவ்வாறு உருவானதுதான் வியாகுல அன்னையின் விழா. மீட்புத் திட்டத்தில் அன்னை மரியா அனுபவித்த துன்பங்களை ஆண்டவர் இயேசு பட்ட பாடுகளோடு ஒன்றித்துப் பார்த்து இன்று இந்த திருவிழாவில் நினைவு கூறுகின்றோம். அன்னை மரியாள் ஏழுவகையான துன்பங்களை அனுபவித்தார்: 1. சிமியோனின் இறைவாக்கு, 2. குழந்தை இயேசுவை

ஏரோது மன்னனிடம் இருந்து காப்பாற்ற எகிப்துக்கு ஓடுதல், 3. இயேசு கோவிலில் காணாமல் போதல், 4. இயேசு சிலுவை சுமந்து செல்கையில் மாதா வழியில் சந்தித்தல், 5. மரித்த இயேசுவை அன்னை மரியாள் மடியில் சுமத்தல், 7. இயேசுவை கல்லறையில் அடக்கம் செய்தல், இது தவிர தன் மகனை "பேய்ப்பிடித்தவன், பெருந்தீனிக்காரன், பாவிகளின் நண்பன்" என்றெல்லாம் கூறியபோது அன்னை மரியாள் அதிகமான துன்பங்களை அனுபவித்தாள். இன்று நமது தாய்மார்களும் தன் பிள்ளைகளைப்பற்றி மற்றவர்கள் தவறாகக் கூறும்போது இத்தகைய துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள். துன்பங்களை அனுபவித்த மரியன்னையின் தியாகங்களை எண்ணிப் பார்ப்போம். இந்த சமூகத்தின் முன்னேற்றத்திற்காக விளிம்பு நிலை மக்களின் துயரம் நீங்க நாமும் துன்பங்களைத் தாங்கும் துணிவு வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் இறையரசுப் பணியை ஆர்வமுடன் மக்களிடையே நிறைவேற்றிட வேண்டி உமதருளைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. எல்லாம் வல்ல இறைவா, தன் மகனின் சிலுவையடியில் நின்று அவருடைய பாடுகளில் பங்கேற்கும் அளவிற்கு மரியன்னைக்கு ஆற்றல் அளித்தவரே, நாங்கள் அன்னையின் பாடுகளில் நாளும் எங்களை இணைத்து உமக்குகந்த பிள்ளைகளாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. கற்பாறையை தண்ணீராக மாற்றியவரே, நாட்டில் பொருளாதார வளர்ச்சியும், விவசாயமும் செழித்து, பஞ்சம், பட்டினி சாவு, கொலை, கொள்ளை போன்ற அநீதச் செயல்கள் நாட்டில் வளராமல் ஒருவரையொருவர் அன்பு செய்து, விட்டுக்கொடுத்து, பகிர்ந்து வாழும் பரந்த மனதை எங்களிடையே வளர்த்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 17.09.2023 பொதுக்காலம் 24ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திருமதி. லதா சுரேஷ்

I. சீராக். 27: 30-28:7 II. உரோ. 14: 7-9 மத். 18: 21-35

இறையேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்றைய வாசகங்கள் அனைத்தும் மன்னிப்பையும் பிறர் அன்பையும் நமக்கு உணர்த்துகின்றன. "தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான்" என்பது பழமொழி. நாம் எந்தச் செயல் செய்கின்றோமோ அதுவே நம்மை வந்து சேறும். நாம் தீமையைச்

செய்துவிட்டு இறைவனிடமிருந்து நன்மையை எதிர்பார்க்க முடியாது. பாவம் நம் மனத்தூய்மையை அழிக்க வல்லது, பாவத்தின் தீர்ப்பு மரணம். அப்பாவத்திலிருந்து நம்மை மீட்கவே இறைமகன் சிலுவையில் இறந்தார். இன்றளவும் நாம் உயிரினங்கள் அனைத்திற்கும் அனைத்து உணர்வுகளையும் ஒன்றாக படைத்த நம் இறைவன் மிருகங்களில் இருந்து மனிதனை வேறுபடுத்தி காட்ட மன்னிப்பு என்னும் அருங்கொடையை நமக்கு பரிசாக அளித்துள்ளார். இயேசுவின் சீடர்கள் எவ்வாறு செபிக்க வேண்டுமென்று இயேசுவிடம் கேட்டபொழுது இறைமகன் நமக்கு கற்றுத் தந்த செபத்தில் மன்னியுங்கள் மன்னிப்பு பெறுவீர்கள் என்று கற்றுக் கொடுத்தார்.

நம் பாவங்களுக்காக கல்வாரியில் பலியான இறைமகன் மன்னிப்பின் மேன்மையை போதித்தார். அவர் போதித்ததோடு விட்டு விடாமல் வாழ்வாக வாழ்ந்தும் காட்டினார். இறைமகனின் கன்னத்தில் அறைந்தவரை மன்னித்தார். தன் முகத்தில் காரி உமிழ்ந்தவரை ஆடையின்றி தன்னை நிர்வாணம் படுத்தியவரையும் மன்னித்தார். தன் இறுதி மூச்சை இறைபதம் சேர்க்கும் பொழுதும் தந்தையே இவர்கள் செய்வது என்னவென்று அறியாமல் செய்கின்றனர் இவர்களை மன்னியும் என்றே கூறி உயிர் நீத்தார். தவறுகளை புரிந்து அதை உணர்ந்து மன்னிப்பு கேட்பவன் மனிதன் ஆகின்றார் அவர்களை மன்னிப்பவன் தெய்வமாகின்றான். தவறே செய்யாமல் நம் பாவங்களுக்காக மரித்த இயேசுவின் சீடர்களாய் நாம் வாழ்வோம், இறையன்பை பெறுவோம் அதற்கு தகுதிபெறும் பொருட்டு இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பு தந்தையே இறைவா, இன்பம் வரும்பொழுது மகிழ்ந்தும், துன்ப நேரத்தில் நாங்கள் துவண்டு போகாமல் எங்களை ஒருநிலைப்படுத்த உம்மால் அழைக்கப்பட்ட பணியாளர்கள் இறையழைத்தல் பணியை முழு உள்ளத்தோடு செயல்படுத்தத் தேவையான ஆன்ம உடல் உள்ள நலனளித்து பாதுகாத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. கருணையின் வடிவே எம் இறைவா, இந்திய நாட்டில் மத இனக் கலவரங்கள் பெருகி வருகின்றது எங்குப் பார்த்தாலும் மனிதன் மனிதனை அழிக்கின்றான். இந்நிலை மாறி சகோதரத்துவ உறவோடு ஒரு குடும்பமாக அனைவரும் வாழும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. அமைதியின் முன்மாதிரியே எம் இறைவா, இன்றைய காலக்சூழலில் பலவிதமான நோயினாலும், கஷ்டங்களாலும், மனவருத்தங்களாலும் துன்புறும் ஏழை எளிய மக்களுக்கு வாழ்வாதாரம் கிடைக்காமல் தவிப்போரை நீரே உம் கருணையினால் அவர்களை பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. நலன்களின் நாயகனே எம் இறைவா, எம் நாட்டிலும், வீட்டிலும் துன்பப்படும் ஏழை மக்களின் குறைகளை போக்கவும், துயர் துடைக்கவும் எங்களால் ஆன எல்லா முயற்சிகளையும் செய்து, தாராள உள்ளத்துடன் உதவிச்செய்யும் தாராள மனதினை எங்களுக்குத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 21.09.2023 புனித மத்தேயு நற்செய்தியாளர் விழா திருப்பலி

**முன்னுரை** திரு. செபாஸ்டின்

ஆண்டவரின் அழைப்பைக் கேட்கும் திருக்கூட்டமே, இன்று திருத்தூதர் மத்தேயுவின் விழாவைச் சிறப்பிக்கின்றோம். இவர் பன்னிரு திருத்தூதர்களில் ஒருவர். கிறிஸ்துவின் நற்செய்தியை எழுதியவர். இவர் கப்பர்நாகூமைச் சேர்ந்தவர். இவரது பழைய பெயர் லேவி, அல்பேயுவின் மகன், வரி வசூலிக்கும் தொழில் செய்தவர். "என்னை பின்பற்றி வா" என்ற ஆண்டவரின் குரலுக்கு உடனே கீழ்ப்படிந்தார். உலக லாபங்களை, பணம் சம்பாதிக்கும் தொழிலை உடனே விட்டெழுந்து இயேசுவை பின் சென்றார். இது வியப்பான நிகழ்வே. ஏனெனில் ஆண்டவர் பணம் படைத்தவரல்ல. விண்ணகத்தில் அழியாப் பொருளை தருபவர் என உள்ளூர உணர்ந்திருந்தார்.

ஒருநாள் இயேசுவுக்கும் சீடர்களுக்கும் விருந்து வைத்தார். அதில் ஆயக்காரர்களும், பாவிகளும் கலந்துக் கொண்டனர். அவ்வேளையில் இயேசு, "நேர்மையாளர்களை அல்ல பாவிகளையே அழைக்க வந்தேன்" என்றார். ஒருவரின் மனவருத்தமும் மன்னிப்பும் பலருடைய மனந்திரும்புதலுக்கு காரணமாக இருக்கிறது. இவருடைய மனமாற்றம் பலர் மனம்மாற முன்னடையாளமாக மாறிற்று. இவர் மக்கள் வழக்கத்தில் உள்ள அரமேய மொழியில் ஒரு நற்செய்தியை எழுதினார். கிரேக்க மொழி பேசும் யூதக் கிறிஸ்தவர்களும், பிற இனத்து கிறிஸ்தவர்களும் திருஅவையில் உறுப்பினரானபோது பல சிக்கல்கள் எழுந்தது. யூதக் கிறிஸ்தவர்கள் மற்ற யூதர்களால் துன்புறுத்தப்பட்டார்கள். கிறிஸ்தவர்கள் மனத்தளர்ச்சியடைந்து இருந்த நிலையில் "யூதர்கள் எதிர்ப்பார்த்த மெசியா இயேசுவேதான்" என்று அழுத்தமாக கூறினார்.

மேலும் இயேசுவே, "இறைமகன்" என்று வலியுறுத்தி, இறையாட்சியின் இலக்கு மற்றும் இயேசுவின் இரண்டாம் வருகையையும் சுட்டிக்காட்டினார். யூத சட்டங்களைவிட இறையாட்சியின் நெறிகள் மேலானவை எனக்கூறி கிறிஸ்தவ மதிப்பீட்டை தொகுத்துக் கொடுத்தார். இயேசுவின் இறப்புக்குப் பின்பு பாலஸ்தீனாவில் பணிபுரிந்தார். பின்பு எத்தியோப்பியா சென்று நற்செய்தி அறிவித்தார். அங்கு சிறையில் அடைக்கப்பட்டு தரையோடு சேர்த்து ஆணியால் அடிக்கப்பட்டார். பின்பு அவரது தலை வெட்டப்பட்டு இரத்த சாட்சியானார். அன்புக்குரியவர்களே,

புனித மத்தேயுவிடம் விளங்கிய உலக செல்வத்தைவிட விண்ணக செல்வம் மேலானது என்று நம்பிக்கையோடு நாமும் வாழ வரமருள வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. குணம் நல்கும் இறைவா, எம் திருஅவைப் பணியாளர்கள் அனைவரையும் உம் அருள்கரங்களால் தொட்டு ஆசீர்வதியும். புனித மத்தேயுவைப்போல் திருஅவையில் உள்ள சிக்கல்களுக்கு சிறந்த தீர்வினைக் காணும் ஆற்றலையும், போதுமான இறைஞானத்தையும் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. நீதியின் வேந்தரே எம் இறைவா, எம் இந்திய நாட்டில் மதவெறியாட்டம் அதிகரித்து மனிதனை மனிதன் கொலை செய்வதும், சூழ்ச்சியால் மக்களை பிரித்தாலும் தலைவர்கள் உள்ளத்தில் நீதி குடிகொள்ளவும், இறையச்சத்தால் உம்மை முழுமையாக புரிந்துக்கொண்டு செயல்பட அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
3. நிலை வாழ்வளிக்கும் வள்ளலே எம் இறைவா, உம்மை வழிபடும் நாங்கள் விண்ணகச் செல்வமே நிலையானது, அழியாதது என்பதை உணர்ந்து இயேசுவின் மதிப்பீடுகளை எங்கள் வாழ்வாக ஏற்று வாழும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 22.09.2023 அருளாளர் ஜோசப் கலசான்ஸ் நினைவு திருப்பலி

**முன்னுரை** திரு. ஜான் அலெக்ஸ்

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, இன்று நாம் ஸ்பானிஸ் நாட்டு சலேசிய குடும்பத்தை சார்ந்த அருளாளர் ஜோசப் கலாசன்ஸ் மற்றும் அவரோடு 93க்கும் அதிகமான மறைசாட்சிகளின் நினைவினை கொண்டாடுகின்றோம். ஸ்பெயின் நாட்டு போரில், கிறித்துவ துறவிகள், குருக்களை சிறையில் அடைத்து இறை பணியாற்றியதற்காக அவர்களை கொலை செய்தார்கள். அத்தகையோரில் 95 சலேசியத் துறவிகள், 39 குருக்கள், 22 திருப்பணியாளர்கள், 24 அருட்சகோதரர்கள், 2 சலேசிய கன்னியர்கள், 4 சலேசிய உடனுழைப்பாளர்கள் அடங்குவர். அனைவரும் ஏறக்குறைய ஜூலை 1936 முதல் ஏப்ரல் 1938 வரையிலான காலகட்டத்தில் கிறிஸ்துவின்மீது கொண்ட ஆழ்ந்த நம்பிக்கையின் பேரிலும் இறைப்பணி செய்ததன் மூலமாகவும் தங்களது இன்னுயிரை கிறிஸ்துவுக்காக இழந்தார்கள்.

சலேசிய அழைப்பின் முன்மாதிரியாகவும், கடவுளிடம் கொண்ட முழு நம்பிக்கையினால் கொலைக்காரர்களை மன்னித்தலில் முன்னோடிகளாகவும் திகழ்ந்தார்கள். இத்தியாகப்பலியில் பங்கெடுக்க வந்துள்ள நாம் அனைவரும், நம் ஒவ்வொருவருக்காகவும்,

சலேசியர்களுக்காகவும் சிறப்பான விதத்திலே செபிக்க கடமைப்பட்டுள்ளோம். தொன்போஸ்கோவைப்போல, வாழ்ந்த இந்த சலேசிய மறைசாட்களின் முன்மாதிரியினைப் பின்பற்றி வாழ்வதற்கு தேவையான அருட்கொடைகளை நாமும் பெற வேண்டி இத்திருப்பலியில் நம்பிக்கையோடு பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நம்பிக்கையின் திருஉருவே இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் துறவிகளுக்காக மன்றாடுகிறோம். இவர்கள் இயேசுவின் வழிநடந்து மக்களை இறைவழியில் நடத்திச் செல்லவேண்டிய அருள்வரங்களைப் பெற்று சாட்சிய வாழ்வு வாழ வரமருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

2. இறைவனை நம்பி நாம் செய்கிற எந்தவொரு செயலும் பொய்த்துப் போவதில்லை. அது எப்போதும் நமக்கு வெற்றியே என்பதை உணர்ந்து, எங்களது நம்பிக்கையை ஆழப்படுத்த வரமரள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்

3. ஆண்டவராகிய இயேசுவே, எம் வாழ்க்கையில் நாங்கள் சந்திக்கின்ற அச்சம், அவமானம், கலக்கம், குழப்பம், துயரம், சாவு போன்ற வேளைகளில் நம்பிக்கை இழந்துவிடாமல் உம்மைப் பற்றிக்கொள்ள அருள்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 24.09.2023 பொதுக்காலத்தின் 25ஆம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. சாம்சன்

I. எசா. 55: 6-9 II. பிலி. 1: 20-24,27 மத். 20: 1-16

தம்மை நோக்கி மன்றாடும் யாவருக்கும் ஆண்டவர் அண்மையில் இருக்கிறார் என்ற இறை நம்பிக்கையை ஏற்று நடக்க வந்திருக்கும் இறைச்சமூகமே, இன்றைய நற்செய்தி நமக்கு தரும் செய்தி ஒருவருக்குரியதை அவருக்கு வழங்குவதுதான் நீதி. இந்த நீதியும் மனிதரின் பார்வையில் ஒன்றாகவும், இறைவனின் பார்வையில் வேறொன்றாகவும் இருப்பதை சுட்டிக்காட்டுகிறது. அத்துடன் மனித நீதியை விட்டு விலகி, இறைநீதியின் பக்கம் நடைபோடவும் அறைகூவல் விடுக்கிறது. இறைவன் பரிவும், கருணையும், இரக்கமும் உள்ளவர். எனவே இறைவனின் இத்தகைய தாராளக் குணத்தை நினைத்து நாம் பெருமைக் கொள்ள வேண்டும். இயேசு பாவிகளை மன்னிக்கவே உலகிற்கு வந்தார், அவருக்கும் சோதனைகள் பலவந்தன.

தன் சீடர்களைப் பார்த்து நீங்களும் போய்விட நினைக்கிறீர்களா? என்று கேட்டதுபோல் நம்மையும் கேட்கின்றார். இயேசுவின் போதனைகளை ஏற்றுக்கொள்ளாத பலர் ஆலய வழிபாடுகளை இறைமதிப்பீடுகளை விட்டு

விலகிச் சென்று விடுகின்றனர். நானும் என் வீட்டாரும் ஆண்டவரையே என்றும் வழிபடுவோம் என்ற யோசுவாவின் வார்த்தையை துணிவுடன் அறிக்கையிட்டு நாமும் ஆண்டவரையே பற்றிக்கொண்டு வாழ உறுதியேற்று தகுதியான உள்ளத்தோடு இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நன்மையின் நாயகனே எம் இறைவா, எம் திருஅவையில் பணியாற்றும் அனைவரும் உம்மைப்போல் தாராள மனதுடனும், திறந்த உள்ளத்துடனும் சாதி, சமய மற்றும் ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து இறையசின் பணிகளை சிறப்பாக செய்திடத் தேவையான வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. இறைஞ்சுவோருக்கு இரங்கிடும் எம் இறைவா, பிளவுகள் பிரிவுகள், ஏற்றத்தாழ்வுகளால் நிறைந்து வெறுப்பை உமிழ்ந்து வரும் இன்றைய உலகில் இளையோர் அமைதி, ஒற்றுமை, சமத்துவம் போன்றவற்றை வளர்க்கும் தூதுவர்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. மாசின்மையின் ஊற்றாகிய எம் இறைவா, எம் இல்லங்களில், குடும்பங்களில் பிள்ளைகளை இறை நம்பிக்கையில் வளர்க்கவும், கல்வியிலும், ஒழுக்கத்திலும் வளர்க்கத் தேவையான ஞானத்தையும், நற்பண்புகளையும் பெற்றோர்களுக்கு அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. துயர் துடைக்கும் தூயவரே எம் இறைவா, வேலைவாய்ப்பின்றி இருப்போருக்கு நல்லதொரு வேலைவாய்ப்பையும், உழைக்க மனமில்லாது இருப்போர் உழைக்கும் நல்லுள்ளத்தையும் பெற்றிடவும், கடன்தொல்லையால் வருந்துவோர், நோய்நொடியால் மனமுடைந்தோர், மற்றும் நம்பிக்கையிழந்து வாழ்வோர் அனைவருக்கும் நீரே அவர்களின் துயர்துடித்து, ஆறுதலிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடகிறோம்.

## 27.09.2023 புனித வின்செண்ட் தே பால் விழா திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

அறவழியில் ஆன்மீகம் காணும் அன்பின் கத்தோலிக்க சகோதர சகோதரிகளே, இன்று தாயாம் திருஅவை தூய வின்சென்ட் தே பால் விழாவைக் கொண்டாட நம்மை அழைக்கிறது. இவர் பிரான்ஸ் நாட்டில் லேன் தஸ் மாவட்டத்தில் உள்ள போயி என்ற கிராமத்தில் 1581ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24ம் நாள் ஜூன் தெ பால் மற்றும் பெர்ட்டிராண்ட தே மொலாஸ் ஆகியோரின் ஆறு குழந்தைகளில் மூன்றாவதாக பிறந்தார். சிறுவயதிலேயே இரக்க குணம் கொண்டவராக வளர்ந்தார். தான் சேர்த்து வைத்திருந்த முப்பது காசுகளை ஒரு பிச்சைக்காரனுக்கு அளித்தார். இவரது ஞானத்தையும் அறிவுத்திறமையும் கண்ட தந்தை இவரை 15 வயதிலேயே குருமடத்தில் சேர்த்தார். பின்பு 19 வயதில் குருவானார். ஆனால் 24

வயதானவர்கள் மட்டுமே குருத்துவப் பணி செய்ய வேண்டுமென்று கவுன்சில் ஆப் டிரென்ட் விதிமுறை வைத்திருந்தது. தந்தை பெருய்ஸ் என்பவரின் நட்பினால் இவரது ஆன்மீகம் ஆழமடைந்தது. 40 வயதில் முற்றிலும் இறைவனில் ஒன்றித்து வாழ்ந்தார். "வின்சென்சியன்" என்ற துறவற சபையை உருவாக்கி, ஆதரவற்றோரைப் பாதுகாப்பதற்காகவே தங்களை அர்ப்பணிக்க வேண்டுமென்று ஒழுங்குமுறையை அமைத்தார்.

இந்த வியத்தகு பணிகளைப் பார்த்த லூயி தெ மரியாக் என்பவரின் தாராளமான பொருளுதவியுடன் பெண்களுக்கும் "பிறரன்பு சகோதரிகள் சபை" துறவற சபையாக ஏற்படுத்தினார். இவற்றோடு மூன்றாம் சபை ஒன்றையும் தொடங்கினார். இந்த சபையினர் ஆழ்ந்த தியாக உணர்வுடன் ஏழை எளியோரின் கண்ணீரை இயேசுவின் பெயரால் துடைக்க வேண்டுமென்று உருவாக்கினார். வசதிபடைத்தோரிடம் பெற்ற செல்வத்தில் மருத்துவமனைக் கட்டினார். பெண்களை இழிவுப்படுத்தும் இராணுவத்திடமிருந்து மீட்டு கன்னியர்களின் இல்லங்களில் இருப்பிடம் தந்தார். விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த நிலங்களையும், விதைகளையும் தந்தார்.

ஏழைக்குழந்தைகள், அனாதைகள், முதியோர் அனைவருக்கும் உணவுக்கொடுக்கும் முறையை ஏற்படுத்தினார். மக்கள் பணியே இறைப்பணி என வாழ்ந்தவர். 1648-1653 வரை 5000 பேருக்கு உணவு வழங்கினார். தமது பணியை ஜெனோவா, போலந்து, மடகாஸ்கர், ஆப்ரிக்கா நாடுகளுக்கு விரிவுப்படுத்தினார். இவர் 1660 செப்டம்பர் 27அன்று இறைவனடி சேர்ந்தார். இன்றுவரை இவரது உடல் பாரிசில் உள்ள புனித லாசர் குருக்கள் இல்லத்தில் அழியாமல் இருக்கிறது. திருத்தந்தை 23ம் ஆசீர்வாதப்பரால் 1729, ஆகஸ்டு 13ல் அருளாளராகவும், 1737 ஜூன் 16 அன்று புனிதராகவும் உயர்த்தப்பட்டார். பொதுநிலையினர் சபைக்கு ஆரம்பித்த "புனித வின்செண்ட் தே பால் சபை" சுமார் 5 லட்சம் உறுப்பினர்களைக் கொண்டு உலகில் எல்லாப் பங்குகளிலும் இயங்கி எண்ணிலடங்கா ஏழை மக்களின் துயர் துடைத்துக்கொண்டிருக்கிறது. இச்சேவையை நாமும் தொடர்ந்து செய்வோம் என உறுதியளித்து பக்தியுடன் இப்பலியில் பங்குபெறுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. ஆதியும் அந்தமுமான இறைவா, திருஅவையென்னும் தெய்வீகப் படகிலே பயணம் செய்து உம் பணியினை சீரும் சிறப்புமாக செய்துவரும் திருத்தந்தை பிரான்சிஸ், கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரையும் ஆசிர்வதித்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. சுமை சுமந்து சோர்ந்திருப்போரே எல்லோரும் என்னிடம் வாருங்கள் என்றவரே இறைவா,இன்றைய நெருக்கடியான உலகச் சூழலிலே

மறைப்பரப்பு பணிக்காக வெளியிடங்களில் பணிபுரியும் அனைவரையும் உம்முன் கொண்டு வருகின்றோம். நீர்தாமே அவர்களுக்கு நல்ல உடல் உள்ள பலத்தைத் தந்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. ஒளியாம் எம் இறைவா, பிறர் துன்பத்தைத் துடைப்பதில் பங்கெடுத்து பணியாற்றும் எம் வின்சென்ட் தே பால் சபையினருக்கு ஆன்ம பலமும், உடல் நலமும் அளித்து பணியினை மென்மேலும் சிறப்பாக செய்திட வேண்டிய ஆற்றலைத் தந்தருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 29.09.2023 புனிதர்கள் மிக்கேல், கபிரியேல், இரபேல் விழா திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிவில்சன்

இறையேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்று புனித மிக்கேல், கபிரியேல், இரபேல் என்ற அதிதூதர்களின் விழாவை நாம் கொண்டாடுகின்றோம். மிக்கேல் என்ற எபிரேயச் சொல்லுக்கு **"கடவுளுக்கு நிகர்"** யார் எனப்பொருள். தீயவைகளை வென்று ஆற்றல் தந்து திருஅவைக்கு பாதுகாப்பும் மனிதன் இறந்தபின் அவர்களைத் தனித்தீர்வைக்கு இறைவனிடம் கொண்டு சேர்ப்பதும் இவரது பணிகள். இவர் திருத்தந்தைக்கும் நற்கருணைக்கும் பாதுகாவலர் என பாரம்பரியம் கூறுகிறது.

கபிரியேல் என்ற சொல்லுக்கு எபிரேய மொழியில் **"கடவுளின் ஆற்றல்"** எனப்பொருள். இறைவன்முன் நிற்பதாகச் சொல்லப்படும் ஏழு தூதர்களில் இவரும் ஒருவரெனப் பாக்கியம் பெற்றவர். தாழ்ச்சியும் ஆறுதலையும் தரக்கூடிய செய்திகளை விண்ணகத்தலிருந்து இறை மக்களுக்கு கொண்டு வந்து சேர்ப்பது இவரது பணி. தானியேல் திருநூலில் எட்டாவது பிரிவில் பெர்சியா அரசிற்கு வரவிருந்த வீழ்ச்சியையும் இறைமக்களுக்கு வெற்றிவாகையும் கிடைக்கும் என்ற செய்தியையும் அறிவிக்கின்றார். அதே நூலில் ஒன்பதாவது பிரிவில் இறையேசுவின் வருகையை முன்னறிவிக்கின்றார். புதிய ஏற்பாட்டில் சக்கரியாவுக்கு ஆலயத்தில் தோன்றி திருமுழுக்கு யோவானின் பிறப்பை அறிவிக்கின்றார். இறையன்னையோடு உரையாடுபவரும் இவரே. மூவேளை செபத்தில் நாம் இவரை நினைவு கூறுகின்றோம்.

இரபேல் என்ற சொல்லுக்கு **"கடவுள் குணமளிக்கின்றார்"** எனப் பொருள். தோபியாசு திருநூலில் புதுமையான விதத்தில் பார்வையை தருகின்றார். அவரது மகனோடு நீண்ட பயணத்தில் தொடர்ந்து உடன் சென்று அவருக்கு கிடைக்க வேண்டியதை பெற்றுத் தருகின்றார். நற்செய்தியில் புரோபாத்திக்கா என்ற குளத்தை சில குறிப்பிட்ட வேளையில் வந்து கலக்குவதாக சொல்பவரும் இவரே. இவர் பயணிகளுக்கும் நோயாளிகளுக்கும் பாதுகாவலர். "இறைவனுக்கு நிகரானவரையும், இறையாற்றல் மிகுந்தவரையும், இறைவல்லமையோடு குணமளிப்பவரையும்,

என்றென்றும் நினைத்து அவர்களின் அரவணைப்பும், பாதுகாப்பும், குணமும் பெற தினமும் தொடர்ந்து அதிதூதரான மிக்கேலே என்ற செபத்தை சொல்லி செபித்து புதிய ஆற்றலை பெறுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, எம் தாய் திருஅவையின் பணியாளர்களாகிய திருத்தந்தை என்றும் நலமோடு பயணிக்கவும், கர்தினால்கள், பேராயர்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள் அனைவருக்கும் புனித மிக்கேல், கபிரியேல், இரபேல் மூவரும் துணை நிற்க வேண்டுமென உம்மை மன்றாடுகிறோம்.
2. பாதுகாப்பு கவசமான இறைவா, ஒவ்வொருவருக்கும் காவலாக துணையாக அதித்தூதர்களை எமக்களித்த உமது கொடைக்காக நன்றி செலுத்துகிறோம். தனித்தனியாகவும் குடும்பத்திற்கும் இச்சமூகத்திற்கும் எவ்வித தீங்கும் நேராமல் காத்து வழிநடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. ஆவியின் வல்லமைக்கொண்ட இறை ஊற்றே திருவிவிலிய மாதத்தில் வழிபாடு மற்றும் கொண்டாட்டத்தோடு நின்றுவிடாமல் இறைவார்த்தையின் பொருளுணர்ந்து அதனை செயல்படுத்தக் கூடிய ஆற்றலையும் வல்லமையும் பொழிந்திட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 30.09.2023 புனித ஜெரோம் திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிசம்பந்தன்

இன்று நம் திருஅவை புனித ஜெரோம் என்ற மறைவல்லுநரை சிறப்பிக்கின்றது. இவர் உரோமை பேரரசில் வாழ்ந்த கிறிஸ்துவ குருவும், இறையியலாளரும், வரலாற்று ஆசிரியருமாவார். இவரின் தந்தை யூசிபஸ் கி.பி. 347ல் சிரிதோன் நகரில் பிறந்தார் என கூறப்படுகிறது. "வுல்காத்தா" என்னும் மொழிபெயர்ப்பை எபிரேயர், அரமேயிக் ஆகிய மொழிகளிலிருந்து நேரடியாக இலத்தீனக்கு மொழி பெயர்த்தவர். திருஅவை "ட்ரெண்ட்" பொதுச்சங்கம் இதை அதிகார பூர்வமாக ஏற்றிருக்கிறது. அறிவித்திருக்கிறது. தனது 39 வயதில் குருப்பட்டம் பெற்று பல ஆண்டுகள் பல இடங்களில் பணிபுரிந்து 5 ஆண்டுகள் பாலைவனத்தில் வாழ்ந்து இயேசுவின் அதீத பக்தராக வாழ்ந்தவர் இலத்தீன், கிரேக்கம், எபிரேயம் ஆகிய மொழிகளில் மிகவும் புலமை பெற்றவர்.

பெத்லகேமுக்கு அருகில் செப்டம்பர் 30ம் நாள் 420ல் இறந்தாலும் பின்னர் இவரின் திருபண்டங்கள் உரோம் நகரிலுள்ள புனித மரியா பேராலயத்திற்கு எடுத்து வரப்பட்டு அங்கு அடக்கம் செய்யப்பட்டது. இவர் தொல்பொருளியல் - ஆவணக்காப்பாளர் விவிலிய அறிஞர்கள், நூலகம், பள்ளி பிள்ளைகள், மொழிப்பெயர்ப்பாளர், ஆகியோருக்கு

பாதுகாவலராகவும் அறிவிக்கப்பட்டுள்ளார். யூகோஸ்லாவியாவின் டால்மேஷியாவில் நான்காம் நூற்றாண்டின் மத்தியில் பிறந்தவராகவும் கூறப்படுகிறது. புனித எரோணிமுசு என்றும் அழைக்கப்படுகிறார். இவரது அரிய மொழிப்பெயர்ப்பால் தான் திருவிவிலியம் என்னும் மகத்தான வரலாற்று காவியத்தை அறிந்து கொள்கிறோம். கிறிஸ்தவம் தழைக்க உழைத்த புனித ஜெரோம் போன்றவர்களை நினைவில் நிறுத்தி தியானித்து இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பு தெய்வமே இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் தங்களது முன்னோடிகளான மறைவல்லுநர்கள், இறையியலாளர்கள், நற்செய்தியாளர்கள் இவர்களின் மாதிரியைப் பின்பற்றி கிறிஸ்துவின் மாட்சியும், நற்செய்தியின் கருத்தாழத்தையும் மக்களுக்கு தெளிவுப்படுத்த வேண்டிய ஞானத்தை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. நிலைவாழ்வின் அடித்தளமே இறைவா, தற்போதைய உலகில் அமைதியற்று வாழ்ந்துக் கொண்டிருக்கும் எங்களுக்கு, பல்வேறு விதமான பிரச்சனைகளிலிருந்து விடுபட்டு வாழும் வாழ்வை அளித்து வழிநடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. இரக்கமே உருவான இறைவா, இன்றைய இளைஞர்கள் தங்களின் வாழ்வின் மகத்துவத்தை உணராமல் நவீன காலத்திற்கேற்ப தங்களின் வாழ்வை சீரழித்துக்கொள்கிறார்கள். இவர்களின் மனநிலையை மாற்றி உமக்கேற்ற பாதையில் வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## பகுதி 2: நம்பிக்கையில் வளர...

## கன்னி மரியாவின் பிறப்பு தந்த சிறப்பு

திரு. டே. ஆக்னல் ஜோஸ்

கத்தோலிக்கத் திருஅவை செப்டம்பர் 8ந்தேதி தூய கன்னி மரியாவின் பிறப்பு விழாவைக் கொண்டாடி மகிழ்கிறது. சாதாரணப் பெண்ணாகப் பிறந்து, கடவுளின் தாயாகும் வரம் பெற்ற மரியாவின் பிறப்பு சிறப்புமிக்கது. கடவுளின் மீட்புத்திட்டத்தின் தொடக்கத்திலிருந்தே அவரது சிந்தனையில் உலக மீட்பரின் தாய் இருந்தார் என்பதை விவிலியம் காட்டுகிறது. "இதோ, கன்னி கருத்தாங்கி, ஓர் ஆண் மகவைப் பெற்றெடுப்பார், அக்குழந்தை "வல்லமையுள்ள கடவுள்" என்று அழைக்கப்படும்" என்ற இறைவாக்கினர் எசாயாவின் முன்னுரையிலே மரியாவின் பிறப்பின் சிறப்பைக் கண்டுணரலாம். கி.பி. 4ம் நூற்றாண்டில்,

மரியாவின் பிறந்த நாளைக் கொண்டாட கிறிஸ்தவர்கள் ஆவல் கொண்டிருந்தனர். எந்த தேதியில் விழாவைக் கொண்டாடலாம் என்று திருஅவையின் தலைவர்கள் குழப்பத்தில் இருந்தார்கள். அக்காலத்தில் செப்டம்பர் 8ல் காட்டில் தனிமையாக செபித்துக் கொண்டிருந்த பக்தியுள்ள துறவி ஒருவர் இசையுடன் கூடிய வினோத கீதங்களின் ஒலியைக் கேட்டார். அப்போது தோன்றிய வானதூதர், மரியா பிறந்த நாளின் விண்ணகக் கொண்டாட்ட ஒலியையே நீர் கேட்கிறீர்" என்று கூறினார். அத்துறவி கூறியதை ஏற்று, திருஅவையில் மரியன்னையின் பிறப்பு இந்நாளில் கொண்டாடப்படுகிறது.

எருசலேமில் செல்வந்தரான யோவாக்கிம் - அன்னா என்ற இணையர் வாழ்ந்தனர். இருவரும் கடவுளின் பார்வையில் நல்லவர்களாக இருந்தும், இருபது ஆண்டுகளாக மகப்பேறு இல்லாமல் முதுமை அடைந்தனர். தங்களின் நிலையைக் கண்டு இஸ்ரயேலர் பலரும் கேலி பேசியதால், குழந்தை வரம் வேண்டி இவர்கள் இடைவிடாமல் கடவுளிடம் மன்றாடி வந்தனர். ஒரு நாள் இருவருக்கும் தோன்றிய வானதூதர் ஒருவர், அவர்கள் மன்றாட்டு கேட்கப்பட்டது என்றும் அக்குழந்தைக்கு "மரியா" என்று பெயரிடுமாறும் அறிவித்தார். யோவாக்கிம் -அன்னா இருவரும் கடவுளின் பேரன்பை நினைத்து எல்லையில்லா மகிழ்ச்சியடைந்தனர்.

அன்னாவின் கருப்பையில் தொடக்கப் பாவத்தின் கறை ஏதுமற்ற அமல உற்பவியாக கன்னி மரியா கருவானார். படைப்பின் தொடக்கத்தில் பாவம் அறியாத நிலையில் ஆதாமும் ஏவாளும் படைக்கப்பட்டனர். புதிய ஏவாளாகிய மரியாவின் உற்பவம் புதிய படைப்பின் தொடக்கமாக அமைந்தது. புதிய ஆதாமாகிய கிறிஸ்துவுக்கு நிகராக மரியாவும் பாவத்தின் கறைபடியாத புதிய படைப்பாக, அன்னாவின் கருப்பையில் உருவானார். எல்லாம் கடவுளின் திட்டப்படி சிறப்பான விதத்தில் நிகழ்ந்தது. மரியா கருவில் வளரவளர, பேறுகாலம் நெருங்க நெருங்க அவரது பெற்றோரின் மகிழ்ச்சி அதிகரித்துக் கொண்டே சென்றது.

அன்னாவுக்கு பேறுகாலம் வந்தது, அவர் தமது அன்பான மகளைப் பெற்றெடுத்தார். கடவுளின் தாய் மரியாவின் பிறப்பைக் கொண்டாடும் விதத்தில் வானதூதர்களும் கீதங்கள் பாடி மகிழ்ந்தனர். வானதூதர் கூறியபடியே, குழந்தைக்கு மரியா என்று பெயரிடப்பட்டது. செல்வந்தரான யோவாக்கிம் ஏழை. எளியவர்களுக்கு விருந்து படைத்து தமது மகளின் பிறப்பை உற்சாகமாக் கொண்டாடி மகிழ்ந்தார். புதிய ஆதாமாகத் தோன்றிய இயேசுவின் பிறப்பு பிற்காலத்தில் ஒரு மாடடைக் குடிலில் நிகழ்ந்தது என்றாலும், அவரது தாயும் புதிய ஏவாளுமான மரியாவின் பிறப்பு ஒரு மாளிகையிலே அரங்கேறியது உண்மை.

கடவுள் படைத்த மனிதகுலம் மாசின்றி தூயதாக இருந்தது. அலகையின் சொல்லைக் கேட்டு கடவுளின் வார்த்தையை முதல்

மனிதர்கள் புறக்கணித்ததால் இந்த உலகில் பாவம் நுழைந்தது. ஆதாம் - ஏவாள் என விவிலியம் அழைக்கிற முதல் பெற்றோரே மனிதகுலத்தின் வீழ்ச்சிக்கு காரணம் என்பது இறையியல் புரிதல். அவ்வாறே கடவுளின் மீட்புத் திட்டத்தில், புதிய ஆதாமாக இயேசு கிறிஸ்துவும் புதிய ஏவாளாக கன்னி மரியாவும் விளங்குகின்றனர் என்கிறது கத்தோலிக்கத் திருச்சபை. ஆகவேதான் தூய வாழ்வில் பங்குபெறும் இறைமக்கள் சமூகத்தின் தாயாக விளங்கும் மரியாவின் பிறப்பு சிறப்பு தருவதாக உள்ளது.

படைப்பின் தொடக்கத்தில் முதல் ஆதாமிடம் இருந்து தோன்றிய முதல் ஏவாள் அலகையின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து மனிதகுலம் பாவத்துக்கு அடிமையாகக் காரணமாக இருந்தார். புதியப் படைப்பில், புதிய ஏவாளிடம் இருந்து புதிய ஆதாம் தோன்றி மக்களை மீட்க வேண்டும் என்பது கடவுளின் திட்டமாக இருந்தது. ஆகவே, "மரியா உண்மையாகவே "கடவுளும் மீட்பருமானவரின் தாய்" என ஏற்கப்பட்டு போற்றப்படுகிறார். இந்த மேன்மையான அருள்கொடையால் விண்ணகத்திலும் மண்ணகத்திலும் உள்ள மற்ற எல்லா படைப்புகளையும் விட மிகவும் சிறப்புற்று விளங்குகிறார்" (திச எண். 52) என்று அறிகிறோம்.

"காலம் நிறைவேறியபோது, நம்மை மீட்டுத் தம் பிள்ளைகள் ஆக்குமாறு தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராக" (கலா 4:4-5) அனுப்ப தந்தை கடவுள் ஆவல் கொண்டிருந்தார். அந்த ஆவல் மரியாவின் பிறப்பால் நிறைவு பெற்றது என்பதால், அது காலத்தின் நிறைவைச் சிறப்பாக மாற்றியது. "மரியா ஒரு புனித தாயாகவே பிறந்தார். அவரது ஆன்மா மிகவும் அழகானது.

இத்தகைய ஓர் ஆன்மாவை இதுவரை கடவுள் படைத்ததே இல்லை. பழைய ஏவாளுக்கு மாறாக, புதிய ஏவாளான மரியா கடவுளின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, உலகை மீட்பதற்குத் துணை செய்தார்" என்கிறார் புனித அல்போன்சுஸ் லிகோரி. இந்த உண்மையை கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் ஏற்க வேண்டும் என்று திருஅவைத் தந்தையர் அழைப்பு விடுத்தனர். இயேசுவை "ஆண்டவர்" என்று குறிப்பிடும் திருவிவிலியம், அவரைத் தமது கருப்பையில் சுமந்த கன்னி மரியாவை "ஆண்டவரின் தாய்" என்று அழைக்கிறது. மனிதராகத் தோன்றிய கடவுளுக்கு உடலும் உருவமும் அளித்தவர் என்பதால் தொடக்கக் காலம் முதலே கன்னி மரியா "கடவுளின் தாய்" என்று போற்றப்படுகிறார்.

ஆண்டவர் இயேசுவின் தாயாக வேண்டும் என்பதற்காக கன்னி மரியா இவ்வுலகில் பிறந்ததே கடவுளது திட்டத்தின் சிறப்பாக அமைகிறது. இயேசுவில் நிறைவேற இருந்த மீட்புத் திட்டம், மரியாவின் மாசற்றப் பிறப்பில் தொடக்கத்தைக் கண்டது என்பதே அவரது பிறப்பின் தனித்துவமாக விளங்குகிறது. ஆகவேதான் உலகெங்கும் வாழுகின்ற கோடிக்கணக்கான கிறிஸ்தவர்கள், கன்னி மரியாவை "அருள் நிறைந்த மரியே வாழ்க"

என்று அன்போடு வாழ்த்திப் போற்றுகின்றனர். அருளின் வாய்க்காலாக விளங்கும் கடவுளின் தாய் மரியாவின் பிறப்பு, நமது வாழ்விலும் ஆண்டவர் இயேசுவின் மீட்பைக் கொண்டு வரட்டும்.

## அருளாளர் ஜோசப் கலசான்ஸ் மற்றும் நண்பர்களின் தியாக வாழ்வு

திரு. ஜான் அலெக்ஸ்

ஜூலை மாதம் 1936ல் ஸ்பெயின் நாட்டில் தேசியவாதிகளுக்கும் கம்யூனிச பிரிவினருக்கும் இடையே உள்நாட்டு போர் நடந்து கொண்டிருந்தது (1936-1939). தொடக்கத்தில் திருஅவைக்கு எதிராக மத வெறி கொண்ட போரில் பல்வேறு கிறித்துவ ஆலயங்கள், குருமடங்கள், கன்னியர் இல்லங்கள் என தாக்குதல்களை கொடுத்தனர். இதில் சில புனிதர்களின் திருப்பண்டங்கள் அழிக்கப்பட்டன, பல்வேறு திருஅவையின் அடையாளங்கள் அழிக்கப்பட்டதுடன் இறைமக்களின் வழிபாடுகளையும் ரத்து செய்தனர். ஆயிரக்கணக்கான திருப்பணியாளர்கள், ஆயர்கள், குருக்கள், துறவிகள் பொது நிலையினர் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டனர்.

நம் முன்னாள் திருத்தந்தை புனித இரண்டாம் யோவான் பவுல், 2000ல் மாபெரும் யூபிலி கொண்டாட்டத்தை முன்னிட்டு, 20ம் நூற்றாண்டின் கிறித்துவ மறைசாட்சிகளின் விபரங்களை சேகரித்தார். மார்ச் 2000ல் கோலிசியத்தில் நடத்தப்பட்ட திருவழிபாட்டில் ஸ்பெயினின் மறை மாவட்டங்களும் கலந்து கொண்டன. சுமார் 10,000க்கும் மேலான ஸ்பெயின் நாட்டு கிறிஸ்தவர்கள் மறைசாட்சிகளாய் கொல்லப்பட்டனர். ஸ்பானிஸ் திருஅவையை உளுக்கிய இச்சம்பவத்தில் தொன் போஸ்கோவின் சலேசியர்களுக்கும் சலேசிய கன்னியர்களுக்கும் இது ஒரு பேரிடியாக அமைந்தது. அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டவர்களில் 93 பேர் சலேசியக்குடும்பத்தை சார்ந்தவர்கள் என்பதில் சிறிது மகிழ்ச்சி என்றாலும் சொலொன்னா துயரில் அவர்கள் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்ததை பார்க்கும் போது நம்மையும் அறியாமல் கண்களில் நீர் எட்டிப்பார்க்கத்தான் செய்கிறது.

### வாலென்சியாவின் குழுவினர் :

ஜூலை 21, 1936ல் 11 மறைசாட்சிகளை கண்டது வாலென்சியா. இரவு முழுமைக்கும் தொடர்ந்து துப்பாக்கிச் சூட்டில் உருக்குலைந்து போனது வாலென்சியாவின் சலேசிய இல்லம். அச்சமயம் சலேசிய மாநிலத் தலைவர் அருட்பணி.ஜோசப் கலாசன்ஸ் அவர்கள் தியானத்தில் கலந்து கொண்டிருக்கிறார். இவர் 1886ல் தொன் போஸ்கோவை நேரில் சந்தித்த முதல் ஸ்பானிஷ் சலேசியராவார். இந்த இல்லத்தில் இருந்த அனைத்து சலேசியர்களை துப்பாக்கி முனையில் ஒன்றாக நிறுத்கவைத்தனர் கலவரக்காரர்கள். அதில் ஒருவன் "ஏன் அவர்களை சுடவில்லை.

எல்லோரையும் கொல்லவே இங்கு வந்தோம் என்பது தெரியாதா உங்களுக்கு"? என்றான். பிறகு அனைவரையும் ஒரு சிறைக்கு அழைத்து சென்றனர். அங்கு அவர்கள் 29ம் தேதி வரை கைதிகளாக இருந்தனர். அதன்பின் எதிர்பாராத வகையில் அனைவரையும் விடுதலை செய்தார்கள். மறைசாட்சியாக கொல்லப்படுவதற்கு முன் இடைப்பட்ட காலங்களில் ஒவ்வொருவருக்கும் நிகழந்த ஒரு தனிப்பட்ட கதை உண்டு.

**குழுத்தலைமையாக்கப்பட்ட பணி. ஜோசப் கலசான்ஸ் :**

மறைசாட்சிகளான இவர்களுது குழுவிற்கு தலைமையாக்கப்பட்டவர் பணி.கலாசன்ஸ், ஏனென்றால் 249 சலேசியர்கள், 14 சலேசிய இல்லங்களை கொண்ட தராக்கோனென்ஸ் சலேசிய மாநிலத்தின் தலைமை தந்தையாக பணியாற்றிக் கொண்டிருந்தார் அவர். நவம்பர் 1872ல் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர் பணி.ஜோசப் கலாசன்ஸ். பின்னாளில் யாருமின்றி அனாதையாக சுற்றி வந்தபோது, பார்சிலோனாவில் ஒரு வீட்டில் பணியாளாக வேலைப்பார்த்து வந்த தனது தூரத்து சகோதரியின் பாதுகாப்பில் வளர்ந்தார். இந்த சகோதரியின் மூலமே தன் கல்விச் செலவுகள், பிறகு கல்லூரிக்கு அனுப்பியது எல்லாமே நிகழ்ந்தது. இங்கு தான் 1886ல், தொன் போஸ்கோவை நேரில் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது.

இந்நிகழ்வு அவரது எண்ணங்களில் முத்தாய்ப்பாய் பதிந்த ஒன்றானது. செப்டம்பர் 1889ல் சலேசிய சபையில் சேர்ந்து, அருளாளர் பிலிப் ரினால்டி அடிகளிடமிருந்து தன் முதல் துறவற ஆடையை பெற்றார். செப்டம்பர் 1890ல் நித்திய வார்த்தைப்பாட்டுக்கு பின் 1895ல் சலேசிய குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். ஸ்பெயின் நாட்டைச் சார்ந்த முதல் சலேசிய குரு என்ற பெருமைக்குரியவர். தன் சலேசிய பணியோடு சேர்ந்து திருப்பணியையும் 20 ஆண்டுகள் திறம்பட செய்தவருக்கு 1916ல் க்யூபா நாட்டிற்கு சிறப்பு பணிக்காக அனுப்பப்பட்டார். ஆறு ஆண்டுகளுக்கு பின் பெரு மற்றும் பொலிவியா சலேசிய மாநிலங்களின் தலைமை தந்தையாக பணியமர்த்தப்பட்டார். அதன் பின் 1925ல் மீண்டும் ஸ்பெயினுக்கு திரும்ப பெறப்பட்டு, தராக்கோனென்ஸ் சலேசிய மாநிலத்தின் தலைமை தந்தையாக பணியாற்றினார்.

கனிவன்புடன் பழகும் குணமுடைய பணி.ஜோசப் கலசான்ஸ் அனைவராலும் போற்றப்பட்டு அன்பு செய்யப்பட்டவர். அவரின் நிர்வாகத் திறமை மற்றும் உடனிருத்தலின் தன்மை அனைத்தும் அவருக்கென ஒரு பாணியை மக்களிடத்தில் உருவாக்கியது. தந்தைக்குரிய பாசத்தினால் அவரை எல்லோரும் "இன்னொரு தொன் போஸ்கோ"வாகவே கண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஜூலை 21, 1936ல் வெலென்சியா சலேசிய மாநிலத்தில், அங்குள்ள சலேசியர்களுக்கு தியானம் வழங்கிக் கொண்டிருந்தார் பணி. ஜோசப். அப்போது அவர் அதன் மாநில தலைமை தந்தையும் ஆவார். அங்கு வந்த கலகக்காரர்கள் அவரையும்

அங்கிருந்த சலேசியர்கள் அனைவரையும் அழைத்துக்கொண்டு சிறையில் அடைத்தனர். ஒரு வாரத்திற்கு பின் அனைவரையும் விடுவித்தார்கள்.

ஆனால் மீண்டும் ஜூலை 29, 1936ல் பணி.ஜோசப் கலசான்ஸ் மற்றும் அவரோடு இரண்டு வேறு சலேசியர்களையும் கைது செய்து போராட்டக்காரர்களின் தலைமையிடத்திற்கு கொண்டு சென்றார்கள். பணி. ஜோசப் அவர்களின் பையில் வைத்திருந்த அங்கியை பார்த்த ஒருவன், "இவன் ஒரு குருவானவன், இவனை கொல்ல வேண்டும்" என்றான். இதற்குமுன் தான் ஒரு சலேசிய குரு என்று அவர்களிடம் சொல்லியிருந்தார் பணி. ஜோசப் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் அனைவரையும் ஒரு வாகனத்தில் வலுகட்டாயமாக ஏற்றி வெலென்சியாவில் உள்ள சிறைக்கு கொண்டு சென்றார்கள்.

வழியிலேயே ஒருவன் பணி. ஜோசப் கலசான்ஸ் அவர்களின் முகத்துக்கு நேராக துப்பாக்கியை வைத்து சுட்டான். "என் தேவனே" என்றபடியே பணி. ஜோசப் இரத்த வெள்ளத்தில் விழுந்து மடிந்தார். கிறிஸ்துவின்மீது கொண்ட ஆழ்ந்த நம்பிக்கையின் பேரிலும் இறைப்பணி செய்ததன் மூலமாகவும் தனது இன்னுயிரை கிறிஸ்துவுக்காக இழந்தார். சலேசிய அழைப்பின் முன்மாதிரியாகவும், கடவுளிடம் கொண்ட முழு நம்பிக்கையினால் கொலைக்காரர்களை மன்னித்தலில் முன்னோடியாகவும் திகழ்ந்தவர் அருளாளர்.ஜோசப் கலசான்ஸ் என்பது குறிப்பிடத்தக்கது. அச்சிறப்புக்குரியவரை சலேசியர்கள் செப்டம்பர் 22ம் நாளில் நன்றியோடும் பாசத்தோடும் நினைவு கூறுகிறார்கள். திருஅவை பணி. ஜோசப் கலசான்ஸ் அவர்களை மார்ச் 11, 2001ல் அருளாளர் நிலைக்கு உயர்த்தியது. மற்றவர்களை 28 அக்டோபர் 2007ல் அருளாளர்களாக அறிவித்தது.

## சிலுவை தரும் அமைதி

திரு. பி. விக்டர்

"சிலுவை" இன்று கிறிஸ்தவர்களின் அடையாளம். ஆனால் ஒரு காலத்தில் இது துன்பத்தின் சின்னமாக அவமானத்தின் அடையாளமாக மரண தண்டனைகள் நிறைவேற்ற பயன்படும் கொலைக் கருவியாக இருந்தது. என்றைக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உலக மக்களின் பாவங்களுக்காக சிலுவையில் அறையப்பட்டு உயிர்நீத்தாரோ, அன்றிலிருந்து "சிலுவை" மீட்பளிக்கும் கருவியாக மாறிப்போனது. ஆண்டவராகிய இயேசுவுக்கு முன்பும் பலர் சிலுவையில் அறையப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளனர். ஆனால் அப்பொழுதெல்லாம் "சிலுவை" பேசும் பொருளானதில்லை. எப்பொழுது இயேசு சிலுவையில் மரித்தாரோ அப்பொழுதிலிருந்து "சிலுவை" பேசும்பொருளானது. அதுமட்டுமல்லாமல் அது மீட்பளிக்கும் சாதனமாக மாறியது. ஒரு காலத்தில் சிலுவையைக் கண்டு பயத்தின் மிகுதியால் ஓடி ஒளிந்த மக்கள் சிலுவையை நேசிக்கும் மக்களாக சிலுவையை நோக்கி பயணப்படும் மக்களாக மாறிப்போயினர்.

துன்பத்தையும்,பயத்தையும்,மரணத்தையும்மட்டுமேகொடுத்துவந்த சிலுவை இன்று மக்களுக்கு சமாதானத்தைத் தருகிறது, ஆறுதலைத் தருகிறது, நம்பிக்கையூட்டுகிறது, வெற்றித் தருகிறது, நிலைவாழ்வுக்கு வழி காட்டுகிறது. இங்கு "சிலுவை" என்று நாம் குறிப்பிடுவது இரண்டு மரத்துண்டுகளைப் பயன்படுத்தி, ஒன்றை நீளவாக்கிலும், மற்றதை அகலவாக்கிலும் ஒன்றின்மேல் ஒன்று என்று குறுக்கே வைத்து கட்டப்பட்ட சிலுவையை அல்ல, இங்கு நாம் குறிப்பிடும் "சிலுவை" என்பது சிலுவையில் மரித்த இயேசுவையே, இயேசு இல்லாத சிலுவை அது, வெறும் சிலுவை, அது மரம் மட்டுமே, அதனால் எப்பயனும் இல்லை. ஆனால் இயேசுவோடு உள்ள சிலுவை நமக்கு வாழ்வு தரும் சிலுவை. இந்த சிலுவைதான் நமக்கு அமைதி தருகிறது. இதைக் குறிப்பிடும்படியாக, "நான் இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்டுள்ளேன்" (கலா. 2:26) என்று புனித பவுல் எழுதுகிறார். மேலும் அவர் கூறும்போது, "ஆண்டவர் இயேசுவின் சிலுவையை அன்றி வேறு எதைப்பற்றியும் ஒருபோதும் பெருமைப் பாராட்டமாட்டேன்" என்கிறார். சிலுவைப் பற்றியச் செய்தி "அழிந்து பேகிறவர்களுக்கு மடமையே, ஆனால் மீட்பு பெறும் நமக்கோ அது கடவுளின் வல்லமை" (1கொரி. 1:18).

சிலுவை தரும் "அமைதி" என்கிற மலரின் முதல் இதழ் "கடவுளின் அன்பை" நமக்கு வெளிப்படுத்துகிறது. சிலுவை இல்லாது இருந்திருந்தால் கடவுளின் அன்பை முழுமையாக அறிந்திருக்க இயலாது. தம் ஒரே மகன்மீது நம்பிக்கைக்கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வைப் பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார்" (யோவா. 3:16). இயேசுவின் சிலுவை மரணம் தந்தையாம் கடவுள் நம்மீது கொண்டிருந்த அன்பை எடுத்தியம்பியது. நாம் நல்லவர்கள் என்பதனால் அல்ல, நாம் பாவிகளாய் இருந்தபோதே கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைத் தந்தார். இவ்வாறு கடவுள் நம்மீது கொண்டுள்ள தம் அன்பை எடுத்துக்காட்டியுள்ளார் (உரோ. 5:8). இயேசுவின் இந்த அன்பை நாம் பிறரை அன்பு செய்யும்படி கொடுக்கப்பட்டுள்ளது. கடவுளை அன்பு செய்கிறேன் என்று சொல்லிக்கொண்டு நம் சகோதர சகோதரிகளை வெறுப்போர் பொய்யர். கண்முன்னேயுள்ள சகோதர சகோதரிகளிடம் அன்பு செலுத்தாதோர், கண்ணுக்குப் புலப்படாத கடவுளிடம் அன்பு செலுத்த முடியாது (1யோவா. 4: 20). சிலுவைத் தரும் அமைதி கடவுள் நம்மீது வைத்துள்ள அன்பை உணர்த்தி, நாம் பிறரை அன்பு செய்ய வேண்டுமென்று தூண்டுகிறதாய் உள்ளது.

சிலுவை தரும் அமைதி என்கிற மலரின் அடுத்த இதழ் நமது பாவங்களிலிருந்து நாம் பெற்றுக் கொண்ட விடுதலையை வெளிப்படுத்துகிறதாய் இருக்கிறது. நாம் நமது பாவத்தின் காரணமாக இறந்தவர்களாய் இருந்தோம் (எபே. 2:1). இறைவனோடு உறவு இல்லாதவர்களாக இருந்தோம். இருளின் ஆளுகையின்கீழ் இருந்தோம்.

இயேசுவின் சிலுவை நம்மை விடுவித்து ஒளியாம் இறைவனின் ஆட்சிக்குரியவர்களாக மாற்றியது. நாம் கிறிஸ்துவுக்குள் இருப்பதால் புதுப்படைப்பாய் மாறியிருக்கிறோம் (2கொரி. 5:17). நம்மிடமுள்ள பாவ இயல்பைக் களைந்து கடவுளின் தெய்வீக இயல்புகளை அணிந்து வாழ அழைக்கப்பட்டுள்ளோம். இழந்துப்போயிருந்த தெய்வச் சாயலைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறோம். இதற்காகவே நாம் முன்குறிக்கப்பட்டோம், முன் குறிக்கப்பட்ட நம்மை ஆண்டவர் அழைத்து தூய்மையாக்கினார். தூய்மையாக்கிய நம்மை ஏற்புடையோராக்கி மாட்சிப்படுத்தியுமிருக்கிறார் (உரோ. 8:30).

எகிப்து நாட்டில் போத்திபாரின் அரண்மனையில் அடிமையாய் இருந்த யோசேப்பு போத்திபாரின் மனைவியின் ஆசைக்கு இணங்க மறுத்த வேளையில் "என் ஆண்டவருக்கு முன்பாக நான் பாவம் செய்யேன்" என்று கூறி தப்பித்து ஓடி தன்னைக் காப்பாற்றிக் கொள்கிறான் (39:9). அதுபோலவே நாம் இயேசுவின் சிலுவைக் காட்சியைக் காணும்போதும், சிந்திக்கும்போதும், தியானிக்கும்போதும், யோசேப்பிடம் காணப்பட்ட எச்சரிக்கை உணர்வு நம்மையும் எச்சரித்து நாம் பாவம் செய்யாதபடி தடுத்து நம்மைப் பாதுகாக்கிறது. சிலுவை தரும் அமைதி நம்மைப் பாவத்திலிருந்து விடுவிப்பது மட்டுமல்ல, பாவம் செய்யாதபடி நம்மை எச்சரிக்கிறது.

சிலுவைத் தரும் அமைதி என்கிற மலரின் மூன்றாவது இதழ் இயேசு சிலுவையில் பெற்றுத்தந்த "சுகத்தை" அல்லது சுகமாகுதல் நமக்கு உணர்த்துகிறதாய் இருக்கிறது. நம்முடைய குற்றங்களுக்காக இயேசு காயமடைந்தார். நமக்கு நிறைவாழ்வளிக்க அவர் தண்டிக்கப்பட்டார் (எசா. 53:8) அவரது தழும்புகளால் நாம் சுகமானோம், அவர்தம் காயங்களால் நாம் குணமடைந்துள்ளோம் (2பேதுரு 2:24). நமது எல்லாவித வியாதிகளிலிருந்தும் இயேசுவின் காயங்கள் நமக்கு விடுதலையைப் பெற்றுக் கொடுக்கிறது. வியாதிலிருந்து சுகம், வியாதிகளின் கடுமையிலிருந்தும், வேதனைகளிலிருந்தும் விடுதலை, வியாதியினால் உண்டாகும் மனப்போராட்டத்திலிருந்து, மன அழுத்தத்திலிருந்து விடுதலையை இந்த இயேசுவின் சிலுவை நமக்குப் பெற்றுத்தருகிறது.

சிலுவையில் இயேசுவின் சிலுவை நமக்குப் பெற்றுத்தருகிறது. சிலுவையில் இயேசுவின் வேதனைகளை எவற்றிலும் ஒப்பிடமுடியாததாக, கொடியதாக இருக்கிறது. நாம் வியாதிப்பட் வேளைகளில் இந்தச் சிலுவையை உற்று நோக்கும்போது இயேசுவின் வேதனை நம்முடைய வேதனையலும் பெயரியதாய் இருப்பதால், அவருடைய வேதனைகள் நமது வேதனைகளை நாம் மறக்கும்படி செய்கிறது. நோயிலிருந்து விடுதலையும் கிடைக்கிறது. இதைத்தான் சிலுவை தியானம் என்று சொல்கிறோம். சிலுவைத் தரும் அமைதி நமது நோய்களிலிருந்து நமக்கு விடுதலை கொடுத்து நம்மை பாதுகாக்கிறது.

நமது சாபங்களுக்கு விடுதலை நமது செபத்தின்மூலம் கிடைக்கிறது. நமது பெற்றோரின் சாபங்களுக்கும் இயேசுவிடம் மன்றாடி அவர்களது பாவங்களுக்கும் மன்னிப்பு வேண்டி சாபத்திலிருந்து விடுதலைப் பெற வேண்டும். அடுத்து நமது மூதாதையரின் பாவங்களால் உண்டான சாபங்களையும் போக்குவதற்கு இயேசுவிடம் மன்றாடி நமது மூதாதையரின் சாபங்களிலிருந்தும் நாம் விடுதலைப் பெற முடியும். இவ்வாறு எல்லாவித சாபங்களிலிருந்தும் நமக்கு இயேசுவின் சிலுவை விடுதலைப் பெற்றுக் கொடுக்கிறது. இயேசுவின் சிலுவைத்தரும் அமைதி, நம்மை வாழ வைக்கிறது, வழிநடத்துகிறது, நமக்கு நிலை வாழ்வை வழங்குகிறது.

## திருஅவைச் செய்திகள்

சகோ. சூசைராஜ், ச.ச.

### இறைவன் விதைப்பதைப் பாதுக்காத்திடுங்கள்

அன்பான இளையோரே, உங்கள் அனைவருக்கும் அன்பான வாழ்த்துக்கள். நீங்கள் எவ்வளவு நல்லவர் என்று கடவுள் உங்களைப் பார்க்கிறார். அவர் உங்கள் இதயங்களில் எதை விதைத்திருக்கிறார் என்பது அவருக்கு மட்டுமே தெரியும். தயவுகூர்ந்து அவைகளைச் சிறந்த கருவூலமாகப் பாதுகாத்திடுங்கள்.

### அமைதியான எதிர்காலத்தை உருவாக்குங்கள்

இவ்வேளையில் இந்நிகழ்வுகளில் பங்குபெற முடியாத இளையோருக்கும், அவர்களின் நாடுகளில் மறைமாவட்டங்கள் மற்றும் ஆயர் பேரவைகளால் ஏற்பாடு செய்யப்பட்ட தலத்திருஅவைகளின் நிகழ்ச்சிகளில் பங்கேற்றவர்களுக்கும் நான் சிறப்பு வாழ்த்தொன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்னும் குறிப்பாக, ஆயத மோதல்கள் மற்றும் போர்கள் காரணமாக நம்முடன் இருக்க முடியாதவர்களை நம் எண்ணங்கள் மற்றும் செபங்களுடன் இணைத்துக் கொள்வோம். அன்பான இளையோரே, இது அமைதிக்கான கனவு, அமைதிக்காக இறைவேண்டல் செய்யும் இளையோரின் கனவு. ஆகவே, அமைதியாக வாழ்ந்து அமைதியான எதிர்காலத்தை உருவாக்குங்கள்.

### உடன் பயணிக்கும் இயேசுவும் மரியாவும்

இந்நாட்களில் நம்மோடு உடன் பயணித்த ஆண்டவர் இயேசுவுக்கும் அவரது அன்புத் தாயாம் அன்னை மரியாவுக்கும் நன்றி கூறுவோம். இவர்கள் இருவரும் இப்போது மட்டுமல்ல எப்போதும் நம்முடன் இருக்கின்றனர் மற்றும், நம் அனைவர்மேலும் தங்களின் பார்வையைப் பதித்துள்ளனர். மேலும் இவர்களைப்போல் நம்மை வேறு யாரும் அன்பு செய்ய முடியாது. ஆண்டவராம் இயேசுவே உமக்கு நன்றி.

## 'motu proprio' அடிப்படையில் திருஅவைச் சட்டத்தில் சீர்த்திருத்தம்

தன் சொந்த விருப்பத்தினால் வெளியிடும் **'motu proprio'** எனப்படும் ஒரு சிறப்பு அறிக்கை வழியாக, மறைமாவட்டங்களில் திருப்பீட அனுமதியுடன் செயல்படும் தனித்தொகுதிகள் குறித்த திருஅவை சட்டத்தின் இரண்டு புதிய விதிமுறைகளை மாற்றியமைத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். திருஅவை நற்செய்தி அறிவிப்பு பணி உட்பட பல்வேறு பணிகளுக்கென ஒரு குறிப்பிட்ட நம்பிக்கையாளர்களால் உருவாக்கப்பட்டுள்ளதாகவும், ஒருபடிநிலை அமைப்பால் கட்டமைக்கப் பட்டுள்ளதாகவும் இருக்கும் தனி அதிகாரம் கொண்ட இதற்கு, அதன் தலைவராகவும் அதனை ஒருங்கிணைப்பவராகவும், வழிபாட்டுபவராகவும் அருள்பணியாளர்கள் மற்றும் திருத்தொண்டர்கள் செயல்படுவார்கள்.

## மணிப்பூரில் வன்முறையை கட்டுப்படுத்த உச்ச நீதிமன்றம் நடவடிக்கை

இந்தியாவின் உச்சநீதிமன்றம் கலவரத்தால் பாதிக்கப்பட்ட மணிப்பூர் மாநிலத்தில் அமைதியை மீட்டெடுக்கவும், நிவாரண நடவடிக்கைகளைக் கண்காணிக்கவும் மூன்று ஓய்வுபெற்ற பெண் நீதிபதிகள் கொண்ட உயர் அதிகாரம் கொண்ட குழுவை அமைத்துள்ளதாக யூகான் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. வடகிழக்கு மாநிலத்தையாளும் மற்றும் டெல்லியில் மத்திய அரசுக்குத் தலைமை தாங்கும் இந்து சார்பு பாரதிய ஜனதா கட்சி, மே 3, அன்று தொடங்கிய வன்முறையைக் கட்டுப்படுத்த தவறியுள்ள வேளை ஆகஸ்ட், 7 அன்று இந்தியாவின் உச்ச நீதிமன்றம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாகவும் அச்செய்தி நிறுவனம் மேலும் தெரிவிக்கின்றது. தலைமை நீதிபதி தலைமையிலான உச்சநீதிமன்ற குழு, நிவாரணப் பணிகள், மறுசீரமைப்பு நடவடிக்கைகள், மறுவாழ்வு மற்றும் வீடுகள் மற்றும் வழிபாட்டுத் தலங்களை மீட்டெடுப்பது ஆகியவற்றைக் கண்காணிக்க வேண்டுமென்று மூவர் குழுவுக்கு உத்தரவிட்டுள்ளதுடன் இது சட்டத்தின் ஆட்சியில் நம்பிக்கை உணர்வை மீட்டெடுபப்பதற்கும் மக்கள் மத்தியில் நம்பிக்கை உணர்வை வளர்ப்பதற்கும் எடுக்கப்பட்ட முயற்சியாகும் என்று அந்த உத்தரவில் கூறியுள்ளது.

## 2024ம் ஆண்டு உலக அமைதி தினத்திற்கான தலைப்பு

புதிய தொழில் நுட்பங்களை வரவேற்கும் அதேவேளை, அழிவைத்தரும் பாதிப்புகள் மற்றும் சுற்றுச்சூழல் அழிவு ஆகியவைகள் குறித்தும் நாம் ஆழமாக சிந்திக்க வேண்டும். 2024ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதி திருஅவையில் சிறப்பிக்கப்பட உள்ள உலக அமைதி தினத்திற்கான கருப்பொருளை, அதாவது தலைப்பை வெளியிட்டுள்ளது திருப்பீடம். "செயற்கை நுண்ணறிவும் அமைதியும்" என்பதே 2024ம் ஆண்டு உலக அமைதி தினத்திற்கான தலைப்பு என ஒருங்கிணைந்த மனிதகுல வளர்ச்சிக்கான திருப்பீடத்துறையால் ஆகஸ்ட் 9ம் நாள் அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சுடர் வாசகர் போட்டி - 101

1. அருளாளர் மரிய ட்ரொங்காந்தி
2. பர்த்தலமேயு
3. மனுவேல் நமுங்கரா - ரொசாரியோ
4. யூதர்களின் சூழ்ச்சியால் சவுக்கால் அடிக்கப்பட்டு, தலைக்கீழாக சிலுவையில் அறையப்பட்டு இறந்தார்
5. புனித எப்ரேம்
6. 77வது
7. திருத்தந்தை மூன்றாம் சிக்ஸ்துஸ்
8. போலந்து இளவரசர் லாடிஸ்லாவ், ஸ்பெயின் இளவரசி மேரி அம்பாரோ
9. அருளாளர் செப்பரீனோ நமுங்குரா
10. திருமுழுக்கு யோவான்
11. நத்தனியேல்
12. மரியா ஆன்மாவோடும் உடலோடும் விண்ணம் எடுத்துக் கொள்ளப்பட்டார்.
13. புனித ஜான் யூட்ஸ்
14. அனைவருக்கும் பொது
15. ஆர்ஸ்

### குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

A. Antonysamy, Salem

Sr. Melqure, Kovai

Sr. Maria Teresa, Chennai

## சுடர் வாசகர் போட்டி 102

1. மரியாவின் துயரங்களில் 7வது துயரம் என்ன?
2. "இறைவன் விதைத்ததை பாதுகாத்திடுங்கள்" கூறியது யார்?
3. புனித ஜெரோம் "வுல்காத்தா" என்னும் மொழிப்பெயர்ப்பை எந்த மொழியிலிருந்து எந்த மொழிக்கு மொழி பெயர்த்தார்?
4. புனித வின்சென்ட் தே பால் உடல் அழியாமல் எங்குள்ளது?
5. தரையோடு சேர்த்து ஆணியால் அடிக்கப்பட்டு இறந்த புனிதர் யார்?
6. சீவித்தரா வேக்கியா நாட்டில் சிறை வைக்கப்பட்ட புனிதர் யார்?
7. உரோமை அரசி ஹெலேனர் கண்டுபிடித்தது என்ன?
8. "பூவின் அரும்பு" என்பது எந்தப் புனிதரின் பெயர்?
9. 2024ஆம் ஆண்டு உலக அமைதி தினத்திற்கான தலைப்பு என்ன?
10. புனித தொன்போஸ்கோவை முதலில் சந்தித்த ஸ்பானிஷ் சலேசியர் யார்?
11. "கடவுள் குணமளிக்கின்றார்" என்பது எந்த வானதூதரின் பெயரின் பொருள்?
12. ஆறு குழந்தைகளில் மூன்றாவது குழந்தையாக பிறந்த புனிதர் யார்?
13. புனித மத்தேயு எந்த மொழியில் நற்செய்தியை எழுதினார்?
14. மரியாவின் துயரங்களில் 3வது துயரம் என்ன?
15. "மரியாவின் தூய பெயர்" என்ற விழாவை முதலில் அறிவித்த திருத்தந்தை யார்?

**தீபகச் சுடர்**

**அன்பு வாசகர்களே!**

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ. 100/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
தொலைப்பேசி: 044 - 26428162.

பெயர்:....................................
முகவரி:..................................
.........................................
.........................................
.........................................

## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

பொதுக்காலம் 26ம் ஞாயிறு
புனித காவல் தூதர்கள் நினைவு
அருளாளர் ஆல்பர்ட் மர்வெல்லி
புனித செபமாலை அன்னை
பொதுக்காலம் 27ம் ஞாயிறு
அருளாளர் அலெக்சாண்டிரியா மரிய தா கொஸ்தா
பொதுக்காலம் 28ம் ஞாயிறு
அருளாளர் அகுஸ்தின் தேவாரம்பரம்பில்
அந்தியோக்கு நகர் புனித இஞ்ஞாசியார் நினைவு
புனித லூக்கா: நற்செய்தியாளர் விழா
பொதுக்காலம் 29ம் ஞாயிறு
புனித லூயிஜி குவனெல்லா
புனிதர்கள் சீமோன், யூதா, திருத்தூதர்கள் விழா
பொதுக்காலம் 30ம் ஞாயிறு மற்றும் அருளாளர் ரூவா

### பகுதி 2: நம்பிக்கையில் வளர...

இறைவன் தந்த வானத்தூதர்கள்
அருளாளர் அகுஸ்தின் தேவாரம்பரம்பிள் வாழ்வு தரும் பாடம்
அருளாளர் அலெக்சாண்டிரினா வரலாறு அறிவோம்
திருஅவையின் செய்திகள்

அன்பு நிறை வாசகர்களே!

இம்மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை செப்டம்பர் 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

# செப்டம்பர் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | வெ | | 1தெச. 4: 1-8 | மத். 25: 1-13 |
| 2 | ச | | 1தெச. 4: 9-11 | மத். 25: 14-30 |
| 3 | **ஞா** | **பொதுக்காலம் 22ம் ஞாயிறு** | **I.** எரே. 20: 7-9<br>**II.** உரோ. 12: 1-2 | மத். 16: 21-27 |
| 4 | தி | | 1தெச. 4: 13-17 | லூக். 4: 16-30 |
| 5 | செ | கொல்கொத்தா நகர் புனித தெரேசா | 1தெச. 5: 1-6, 9-11 | லூக். 4: 31-37 |
| 6 | பு | | கொலோ. 1: 1-8 | லூக். 4: 38-44 |
| 7 | வி | | கொலோ. 1: 9-14 | லூக். 5: 1-11 |
| 8 | வெ | புனித கன்னி மரியாவுடைய பிறப்பு விழா | மீக்கா 5: 2-5 | மத். 1: 1-6, 18-23 |
| 9 | ச | | கொலோ. 1: 21-23 | லூக். 6: 1-5 |
| 10 | **ஞா** | **பொதுக்காலம் 23ம் ஞாயிறு** | **I.** எசே. 33: 7-9<br>**II.** உரோ. 13: 8-10 | மத். 18: 15-20 |
| 11 | தி | | கொலோ. 1: 24-2:3 | லூக். 6: 6-11 |
| 12 | செ | புனித மரியாவின் தூய்மைமிகு பெயர் | கொலோ. 2: 6-15 | லூக். 6: 12-19 |
| 13 | பு | | கொலோ. 3: 1-11 | லூக். 6: 20-26 |
| 14 | வி | **திருச்சிலுவையின் மாட்சி விழா** | **I.** எண். 21:4-9<br>**II.** பிலிப். 2: 6-11 | யோவா. 3: 13-17 |
| 15 | வெ | புனித மரியாவின் துயரங்கள் | 1திமொ. 1: 1-2, 12-14 | லூக். 6: 39-42 |
| 16 | ச | புனிதர்கள் கொர்னேலியுஸ், சிப்பிரியன் | 1திமொ. 1: 15-17 | லூக். 6: 43-49 |
| 17 | **ஞா** | **பொதுக்காலம் 24ம் ஞாயிறு** | **I.** சீராக். 27: 30-28:7<br>**II.** உரோ. 14: 7-9 | மத். 18: 21-35 |
| 18 | தி | | 1திமொ. 2: 1-8 | லூக். 7: 1-10 |
| 19 | செ | புனித ஜனுவாரியுஸ் | 1திமொ. 3: 1-13 | லூக். 7: 11-17 |
| 20 | பு | புனிதர் ஆண்ட்ரு கிம் தே கோன் | 1திமொ. 3: 14-16 | லூக். 7: 31-35 |
| 21 | வி | புனித மத்தேயு, நற்செய்தியாளர் விழா | எபேசி. 4: 1-7, 11-13 | மத். 9: 9-13 |
| 22 | வெ | | 1திமொ. 6: 2-12 | லூக். 8: 1-3 |
| 23 | ச | பியத்ரெல்சினா நகர் புனித பியோ | 1திமொ. 6: 13-16 | லூக். 8: 4-15 |
| 24 | **ஞா** | **பொதுக்காலம் 25ம் ஞாயிறு** | **I.** எசா. 55: 6-9<br>**II.** பிலிப். 1: 20-24,27 | மத். 20: 1-16 |
| 25 | தி | | எஸ்ரா. 1: 1-6 | லூக். 8: 16-18 |
| 26 | செ | புனிதர்கள் கோஸ்மாஸ், தமியான் | எஸ்ரா. 6: 7-8, 12,14-20 | லூக். 8: 19-21 |
| 27 | பு | புனித வின்செண்ட் தே பால் | எஸ்ரா. 9: 5-9 | லூக். 9: 1-6 |
| 28 | வி | புனித வென்செஸ்லாஸ், புனித லாரன்ஸ் | ஆகாய் 1: 1-8 | லூக். 9: 7-9 |
| 29 | வெ | **புனிதர்கள் மிக்கேல், கபிரியேல், இரபேல் முதன்மை வானத்தூதர்கள் விழா** | **I.** தானி. 7: 9-10,13-14<br>**II.** திவெ. 12: 7-12 | யோவா.1: 47-51 |
| 30 | ச | புனித ஜெரோம் | செக். 2: 1-5, 10-11 | லூக். 9: 43-45 |